233

~~239~~ 233

CHILDREN'S STORIES

FROM

INDIAN HISTORY

FOR STANDARD IV

2220

OFFICE OF THE EXAMINER OF BOOKS
5 FEB 1946
MADRAS

By

K. S. SUBRAMANIA AYYAR, B.A., L.T.,

G. V. K. SWAMI & Co.,

PUBLISHERS

KUMBAKONAM :: MADRAS.

பாலர் இந்திய சரித்திரக் கதைகள்

(நான்காம் வகுப்பிற்கு)

15 FEB 1945
MADRAS

ஆசிரியர் :

K. S. சுப்பிரமணிய ஐயர், B.A., L.T.,

954

ஜி. வி. கே. ஸ்வாமி அண் கோ.,

பப்ளிஷர்ஸ்

கும்பகோணம் : : சென்னை

பதிப்புரிமை] [விலை அணா 8

First Impression 1944

V44

The B. N. Press, Educational Printers

5 FEB 1945

முகவுரை

1939-ம் வருஷம் வெளிவந்துள்ள ஆரம்ப பாடசாலை புதிய பாடதிட்டத்தை அனுசரித்து "பாலர் இந்திய சரித்திரக் கதைகள்," புத்தகங்களை 4, 5, வகுப்பு மாணவர்களுக்குப் பயன்படத் தக்க முறையில் எழுதியுள்ளேன். இப் புத்தக வரிசைகளில், கையாளப்பட்டுள்ள வசன நடை மாணவர்கள் மனத்தில் ஊக்கத்தையும், உணர்ச்சியையும் உண்டாக்கக்கூடிய முறையில் எளிய நடையில் அமைந்திருக்கிறது.

தேவையான இடங்களில் உருவப் படங்களும், தேசப் படங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்களும் கல்வி இலாகா அதிகாரிகளும் இப் புத்தகங்களை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆசிரியர்.

பொருளடக்கம்

எண்	பொருள்		பக்கம்
1.	நமது தேசம்	...	1
2.	அலெக்ஸாண்டரும் புருஷோத்தமரும்	...	4
3.	அசோகர்	...	7
4.	கிறிஸ்து மகான் கி. மு—கி. பி.	...	11
5.	குப்த அரசர்களின் பொற்காலம்	...	13
6.	ஹர்ஷவர்த்தனரும் அவர் சாம்ராஜ்யமும்	...	17
7.	முகம்மது நபி	...	21
8.	பல்லவர்கள் : மகாபலிபுரம்	...	24
9.	ராஜபுத்திரர்கள் : அவர்களுடைய குணாதிசயங்கள்	...	29
10.	முகம்மதியர் படையெடுப்பு	...	31
11.	கிருஷ்ண தேவராயர்	...	35
12.	அக்பர்	...	38
13.	கட்டிடப் பிரியர் ஷாஜஹான்	...	41
14.	ராபர்ட் கிளைவ்	...	43
15.	விக்டோரியா மகாராணியார்	...	47
16.	சென்னைப்பட்டினம்	...	50
17.	வேலூர் கோட்டை	...	53
18.	செஞ்சிக்கோட்டை	...	56
19.	தஞ்சாவூர்	...	59
20.	திருச்சினாப்பள்ளி	...	61
21.	ராஜேந்திர சோழன்	...	65
22.	பொற்கைப் பாண்டியன்	...	66
23.	சரபோஜி ராஜா	...	68
24.	விசுவநாத நாயக்கர்	...	71

பாலர் இந்திய சரித்திரக் கதைகள்

நான்காம் வகுப்பு

1. நமது தேசம்

நாம் வசிக்கும் இத் தேசத்திற்கு **இந்தியா** என்று பெயர். நம் முன்னோர்கள் இதைப் **பரதகண்டம்** என்று அழைத்துவந்தார்கள். பல வருஷங்களுக்கு முன்னால் பரதர் என்ற ஓர் அரசர் நம் தேசத்தை ஆண்டு வந்தார். அவர் பெயராலேயே நம் தேசத்தைப் பரத கண்டம் என்று அழைக்கிறோம்.

இந்தியாவின் இயற்கைப் படத்தைப் பாருங்கள். வடக்கே பெரிய மலைத்தொடர்கள் காணப் படுகின்றன. அவைகளுக்கு **இமயமலைத் தொடர்கள்** என்று பெயர். இதற்கு வடக்கே சீனு, **திபேத்து** முதலிய நாடுகள் உள்ளன. கிழக்கில் **வங்காளக் குடாக் கடல்** இருக்கிறது. தெற்கே உள்ளது **இந்து மகா சமுத்திரம்**. மேற்கே **அரபிக் கடல்** இருக்கிறது. நம் தேசம் மூன்று பக்கங்களில் நீராலும் ஓர் பக்கம் நிலத்தாலும் சூழப்பட்டிருப்பதால் அதைத் **தீபகற்பம்** என்று அழைக்கிறோம்.

இமயமலைகள், உலகத்திலுள்ள எல்லா மலைகளைக் காட்டிலும் மிகப் பெரியவை. அதன் சிகரங்கள் எப்போதும் பனியால் மூடப்பட்டிருக்கின்றன.

இமயமலைகள் என்ருல் பனியால் மூடப்பட்ட மலைகள் என்று பொருள். அன்னியர் இம்மலைகளைக் கடந்து நம் தேசத்திற்குள் வருவது மிகவும் கஷ்டம். நம் தேசத்திற்கு வடமேற்கே **ஆப்கானிஸ்தானம்** என்னும் ஓர் தேசம் இருக்கிறது. அதற்கும் நம் தேசத்திற்கும் இடையில் **சுலைமான், கிர்தார்** முதலிய மலைகள் உள்ளன. இம் மலைகளுக்கு இடையில் சில கணவாய்கள் இருக்கின்றன. **கைபர் கணவாய்** இவற்றுள் முக்கியமானது. முற்காலத்தில் பல ஜாதியார்கள் இந்தக் கணவாய் வழியாகத்தான் நம் தேசத்திற்கு வந்தார்கள்.

இமயமலையில் பல பெரிய நதிகள் உற்பத்தியாகின்றன. இவைகளில் முக்கியமானவை **யமுனை, கங்கை, சிந்து, பிரம்மபுத்திரா** நதிகளாகும். இவை பாயும் செழித்த சமவெளிக்கு **இந்துஸ்தான்** சமவெளி என்று பெயர். இங்கே மக்கள் கூட்டம் அதிகம். இச் சமவெளி, செல்வமும் சிறப்பும் உள்ளதாக இருக்கிறது. இச் சமவெளியில் பல புண்ணிய க்ஷேத்திரங்கள் உள்ளன. கங்கை நதியை நாம் தெய்வீக நதியாகக் கொண்டாடுகிறோம்.

நம் தேசத்தின் மத்தியில் **விந்திய மலைத்தொடர்** கிழக்கு மேற்காகச் செல்லுகிறது. இது, வட இந்தியாவைத் தென் இந்தியாவிலிருந்து பிரிக்கிறது. தென் இந்தியாவில் **மேற்குத் தொடர்ச்சி மலைகள், கிழக்குத்தொடர்ச்சி மலைகள்** என்ற இரண்டு தொடர்கள் கடற்கரையோரங்களில் செல்லுகின்றன. இத் தொடர்களுக்கு இடையிலுள்ள நிலம் மிகவும் மேடானது. ஆகவே அதற்குத் **தட்சிண பீடபூமி** என்று பெயர். மேற்கு

மலைத் தொடருக்கும் அரபிக் கடலுக்கும் இடையே குறுகிய சமவெளிப் பிரதேசம் உள்ளது. இதற்கு வடக்கே **கொங்கணக்கரை** என்றும் தெற்கே **மலையாளக் கரை** என்றும் பெயர். இங்கே மழை அதிகம். ஆதலால் செழிப்பாக இருக்கிறது. கிழக்கே உள்ள விசாலமான சமவெளிக்கு **சோழமண்டலக் கரை** என்று பெயர். அநேகமாய்த் தென் இந்திய நதிகள் மேற்கில் உற்பத்தியாகிக் கிழக்கு சமவெளியில் பாய்கின்றன. இவைகளில் முக்கியமானவை **கோதாவரி, கிருஷ்ணு, பெண்ணை, காவிரி** முதலியன. இவைகளின் சமவெளி மிகவும் செழிப்பானவை. இந்தியாவின் தெற்கு முனைக்கு **கன்னியாகுமரி முனை** என்று பெயர்.

நம் தேசம் மிகப் பழமையானது. இப்பொழுது நமது இந்தியா தேசத்தில் சுமார் 40 கோடி மக்கள் இருக்கிறார்கள். இவர்களுடைய உணவு, உடை முதலியன அவரவர் இருக்கும் இடத்திற்கு ஏற்ற வாறு வேறுபட்டிருக்கின்றன. நம் தேசத்தில் பல வித மதத்தினர்கள் இருக்கிறார்கள். அவர்களில் சிலர் ஹிந்து மதத்தினர்கள்; சிலர் இஸ்லாம் மதத்தினர். சிலர் கிறிஸ்தவ மதத்தினர்கள். நம் தேசத்தில் பலவித பாஷைகள் பேசப்படுகின்றன. தென் இந்தியாவின் தெற்குக்கோடியிலுள்ள நாம், தமிழ் பேசுகிறோம். நம் மாகாணத்திலேயே தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய பாஷைகள் பேசப் படுகின்றன. வட இந்தியாவில் பல பாஷைகள் பேசப்படுகின்றன. அவைகளில் முக்கியமானவை ஹிந்துஸ்தானி, வங்காளி, மராத்தி முதலியன. சில ஐரோப்பியர்களும் நம் தேசத்தில் வசிக்கிறார்

கள். நம் தேசம் இப்போது ஆங்கில ஆட்சியின் கீழ் உள்ளது.

நம் தேசத்தில் பலவித வேறுபாடுகளும் கொள்கைகளும் இருந்தாலும் நாம் எல்லோரும் ஒரே தேசத்தில் வாழ்பவர்கள். நாம் எல்லோரும் இந்தியர்களே. ஆகவே நாம் எல்லோரும் சமாதானத் துடன் ஒற்றுமையாக வாழவேண்டும்.

கேள்விகள்:

1. நம் தேசத்தை ஏன் பரத கண்டம் என்று அழைக் கிறார்கள்?

2. நம் தேசத்தை ஏன் தீபகற்பம் என்று அழைக் கிறோம்?

3. பண்டைக் காலத்தில் அந்நியர்கள் நம் நாட்டிற்கு எவ்வாறு வந்தார்கள்?

4. தட்சிண பீடபூமி எங்கே உள்ளது? அதற்கு ஏன் அப் பெயர் வந்தது?

5. நம் தேசத்து நதிச் சமவெளிகளில் ஏன் மக்கள் அதிகம் வசிக்கிறார்கள்?

---

2. அலெக்ஸாண்டரும் புருஷோத்தமரும்

நம் நாட்டின் வடமேற்கிலுள்ள கணவாய் களின் வழியாகப் பல அந்நியர்கள் நம் நாட்டிற்குள் வந்தார்கள். அவர்களில் ஒரு வகுப்பினர் **கிரேக்கர்** ஆவர். அவர்கள் **கிரீஸ்** தேசத்தைச் சார்ந்தவர்கள். அத்தேசத்தில் **மாஸிடோனியா** என்ற இடத்தில் **பிலிப்**

என்ற அரசர் ஆண்டு வந்தார். அவருக்குப் பின் அவர் மகன் **அலெக்ஸாண்டர்** அரசரானார்.

அலெக்ஸாண்டர்

அலெக்ஸாண்டர் மிகவும் புகழ்பெற்ற அரசர். அவர் ஓர் பெரிய போர்வீரர். பாரசீகம், ஆப்கனிஸ்தானம் முதலிய நாடுகளை ஜெயித்தார். இந்தியாவின் வளத்தையும் செல்வத்தையும் கேள்வியுற்று நம் நாட்டின் மேல் படையெடுத்தார்.

கி. மு. 327-ம் வருஷத்தில் அவர் இந்தியாவின்மேல் படையெடுத்து வந்தார். அப்பொழுது வட இந்தியாவில் அநேக சிற்றரசர்கள் ஆண்டு வந்தார்கள். அவர்கள் ஒற்றுமையின்றித் தங்களுக்குள் விரோதம் கொண்டு இருந்தார்கள். அலெக்ஸாண்டர் எல்லா சிற்றரசர்களையும் தனக்குக் கீழ்ப்படியுமாறு ஓர் உத்திரவு அனுப்பினார். அநேக அரசர்கள் அலெக்ஸாண்டருக்குக் கீழ்ப்படிந்தார்கள்.

அக் காலத்தில் **தக்ஷசீலம்** என்ற நகரம் சிறப்பாக இருந்தது. அங்குள்ள சர்வகலாசாலை மிகவும்

சிறந்து விளங்கியது. அந்நாட்டை **அம்பி** என்ற ஓர் அரசர் ஆண்டுவந்தார். அவர் அலெக்ஸாண்டரின் படையெடுப்பைக் கேள்வியுற்று அவரை மரியாதையுடன் வரவேற்று உபசரித்தார். இருவரும் சிறந்த நண்பர்கள் ஆனார்கள். ஆனால் எல்லோருமே அலெக்ஸாண்டருக்குக் கீழ்ப்படிந்து விடவில்லை.

அலெக்ஸாண்டர் படையெடுத்து வந்த காலத்தில் பாஞ்சால நாட்டை **புருஷோத்தமர்** என்ற ஓர் அரசர் ஆண்டுவந்தார். அவரிடம் ஓர் பெரும் சேனை இருந்தது. அவரும் அலெக்ஸாண்டரைப் போல் ஓர் சிறந்த போர்வீரர். அவர் அலெக்ஸாண்டருக்குக் கீழ்ப்படியாமல் அவரை எதிர்க்கத் தயாரானார். இரு சைன்யங்களும் **ஜீலம் நதிக் கரையில்** சந்தித்தன. இருவருக்கும் கடும்போர் நடந்தது. கடைசியில் கிரேக்கர்களே வெற்றி பெற்றார்கள். புருஷோத்தமர் சிறை செய்யப்பட்டு அலெக்ஸாண்டர் முன்பாக நிறுத்தப்பட்டார். கிரேக்க அரசர், தான் அவரை எவ்வாறு நடத்தவேண்டுமென்று கேட்க, புருஷோத்தமர் தைரியமாகத் தன்னை ஓர் அரசனைப் போல் நடத்தவேண்டும் என்று கேட்டார்.

அலெக்ஸாண்டர் புருஷோத்தமருடைய வீரத்தைப் பாராட்டி அவருடைய நாட்டை அவருக்கே திருப்பிக் கொடுத்தார். இருவரும் சிறந்த நண்பர்களானார்கள். இந்தியாவிலிருந்த வேறு சில தேசங்களையும் ஜெயிக்கவேண்டுமென்று அலெக்ஸாண்டருக்கு விருப்பம். ஆனால் அவருடைய போர் வீரர்களுக்குக் களைப்பு ஏற்பட்டதனால் தங்களுடைய நாட்டுக்குச் செல்ல விரும்பினார்கள். ஆகவே அலெக்ஸாண்டர்

சிந்து நதி வழியாக அரபிக் கடலை அடைந்து தன் நாட்டிற்குத் திரும்பினர். ஆனல் போகும் வழியில் **பாபிலோன்** என்ற இடத்தில் விஷஜுரம் கண்டு அவர் இறந்தார்.

கேள்விகள் :

1. அலெக்ஸாண்டர் எந்நாட்டு அரசர்?
2. அவர் ஜெயித்த நாடுகள் யாவை?
3. அவர் இந்தியாவின்மேல் ஏன் படையெடுத்தார்?
4. அம்பி என்பவர் யார்? அவர் அலெக்ஸாண்டரிடத்தில் எவ்வாறு நடந்துகொண்டார்?
5. ஜீலம் நதிக் கரையில் யார் யாருக்கும் சண்டை நடந்தது? அதன் முடிவு என்ன?
6. அலெக்ஸாண்டர் ஏன் தன் நாட்டிற்குத் திரும்பினர்?

---

3. அசோகர்

அலெக்ஸாண்டர் இந்தியாவிற்கு வந்த சமயத்தில் வட இந்தியாவில் அநேக சிறு ராஜ்யங்கள் இருந்தன. அவற்றில் ஒன்று **மகத** ராஜ்யம் என்பது. அது மௌரிய அரசர்கள் காலத்தில் மிகவும் உன்னத நிலை பெற்று இருந்தது. அவ்வமிச அரசர்களில் மிகவும் புகழ் பெற்றவர் அசோகர். **மௌரிய** வம்சத்தை ஏற்படுத்தியவர் சந்திரகுப்தர் என்பவர். அவருக்கு முன் மகத ராஜ்யத்தை **நந்த வம்சத்து** அரசர்கள் ஆண்டுவந்தார்கள். சந்திரகுப்தர் நந்த அரசர்களிடமிருந்து மகத ராஜ்யத்தை ஜெயித்துக் கொண்டார். அவரது காலத்தில் வட இந்தியா முழுவதும் அவரது ஆளுகையின் கீழ் இருந்தது. அவர் மிகத் திறமையுடன் ஆண்டார்.

பிறகு சந்திரகுப்தருடைய குமாரர் **பிந்துசாரர்** சில வருஷங்கள் ஆண்டார். அவருக்குப் பின் அவர் குமாரர் **அசோகர்** பட்டத்திற்கு வந்தார். அவர் அரசாட்சி முறையில் தேர்ச்சி பெற்றவர். அவர் தன் ராஜ்யத்தைப் பெரிதாக்க எண்ணினர். கி. மு. 261-ல் அவர் **கலிங்க** நாட்டின்மேல் படை எடுத்தார். அவர் அந்நாட்டை வென்று தன் ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டார். கலிங்கநாட்டு மக்கள் மிகவும் வீரத்துடன் போர்செய்தார்கள். கலிங்கப் போரில் லக்ஷக் கணக்கான மக்கள் மாண்டார்கள். அநேகர் காயமடைந்தார்கள். இவற்றை எல்லாம் கண்ட அசோகர், இனிச் சண்டை செய்வதில்லை என்று சபதம் செய்துகொண்டார்.



அசோகர் நாட்டிய தூண்

இச் சமயத்தில் அசோகர் பௌத்த மதத்தைப்பற்றிக் கேள்விப்பட்டார். அம் மதத்தின் முக்கியக் கொள்கை ஜீவகாருண்யமாகும். அசோக

ருக்குச் சுமார் 300 வருஷங்களுக்கு முன் புத்தர் என்ற மகான் வாழ்ந்துவந்தார். அவருடைய உபதேசம் அசோகர் காலத்தில் பல பௌத்த சந்நியாசிகளால் போதிக்கப்பட்டு வந்தது. அசோகருக்கு அதில் பற்று ஏற்பட்டு, ஓர் பௌத்தரானார்.

பௌத்த மதக் கொள்கைகளைத் தம்முடைய குடிகளுக்குப் போதிக்க அசோகர் பல ஏற்பாடுகள் செய்தார். பௌத்த சந்நியாசிகளைத் தன் நாட்டின் எல்லா பாகங்களுக்கும் அனுப்பி புத்த மதத்தைப் பரவச் செய்தார். தம் குடிகளுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் அநேக நல்ல ஒழுக்கங்களையும் சட்டங்களையும் ஏற்படுத்தினார். புத்தமதக் கொள்கைகளைக் கல் தூண்களிலும் பாறைகளிலும் செதுக்கி வைத்தார்.

"பெற்றோர்களையும் பெரியோர்களையும் மரியாதையாக நடத்தவேண்டும். உண்மையே பேசவேண்டும். பேச்சிலும் செய்கையிலும் பரிசுத்தமாக இருக்கவேண்டும். கீழ் அந்தஸ்திலுள்ளவர்களைக் கருணையுடன் நடத்தவேண்டும். எல்லா உயிர்களிடத்தும் அன்பாக இருக்கவேண்டும்". இவைகளே அசோகர் போதித்த உண்மைகளாகும்.

அசோகர் இந்தியாவில் புத்த மதத்தைப் பரவச்செய்தது போலவே வெளி நாடுகளிலும் செய்தார். இலங்கை, பர்மா, சீனா முதலிய நாடுகளுக்கு பௌத்த சந்நியாசிகளை அனுப்பி மதப் பிரசாரம் செய்தார்.

அசோகர் தன் குடிகளின் நன்மைகளையும் நன்கு கவனித்தார். அவர் காலத்தில் மக்கள் சந்

தோஷமாக இருந்தார்கள். அவர் தம் நாட்டில் அநேக நல்ல சாலைகளை அமைத்தார். அவைகளின் இருபுறத்திலும் நிழல் தரக் கூடிய மரங்களை வைத்து வளர்த்தார். சாலைகளில் ஆங்காங்கே கிணறுகள் வெட்டினர். அவைகளுக்கு அருகே சத்திரங்கள் கட்டினர். மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் வைத்தியசாலைகள் ஏற்படுத்தினர்.

அசோகர் தாம் புத்த மதத்தைப் பின்பற்றிய போதிலும் பிற மதங்களை வெறுக்கவில்லை. அந்நிய மதத்தினர்களை அவர் அன்பாகவும் மரியாதையாகவும் நடத்தினர். அவருடைய கல் வெட்டுகளிலிருந்து அவர் செய்த பெரிய வேலைகளை நாம் அறிகிறோம். குடிகளின் நன்மையையே பெரிதும் கருதி ஆண்ட அரசர்களில் அவர் மேன்மையானவர். அவர் சுமார் 40 வருஷம் ஆட்சி செய்தார்.

கேள்விகள் :

1. மௌரிய வம்சத்தை ஏற்படுத்தியவர் யார்?
2. அசோகர் ஏன் கலிங்க நாட்டோடு போர் செய்தார்? அதன் முடிவு என்ன?
3. அசோகர் எவ்வாறு பௌத்த மதத்தைப் பரவச் செய்தார்?
4. அசோகர் மக்களுக்குச் செய்த நன்மைகள் யாவை?
5. அவருடைய கல் வெட்டுகளிலிருந்தும் கல் தூண்களிலிருந்தும் நாம் அறிவதென்ன?
6. அசோகர் பிற மதத்தினர்களை எவ்வாறு நடத்தினர்?
7. அசோகர் எந்நாடுகளில் பௌத்த மதத்தைப் பரவச் செய்தார்?

4. கிறிஸ்து மகான்: கி. மு—கி. பி.

எந்நாட்டுச் சரித்திரத்திற்கும் கால பாகுபாடு அவசியம். அது இல்லாமல் நாம் சரித்திரம் கற்க முடியாது. சரித்திர நிகழ்ச்சிகள் கோர்வையாக எவ்வாறு ஏற்பட்டன என்று அறிவது சரித்திரக் கல்விக்கு மிகவும் அவசியம். நம் நாட்டில் பல பெரிய அரசர்கள் தங்கள் ஆட்சியைக் கொண்டு காலத்தைக் கணக்கிட்டார்கள். அவ்வாறு விக்ரம சகாப்தம், சாலிவாகன சகாப்தம், சாக சகாப்தம் என்று ஏற்பட்டுள்ளன. தற்காலத்தில் அதே மாதிரி கிறிஸ்துவர்கள் ஏசுவின் பிறப்பை ஆதார மாகக் கொண்டு, அதற்கு முன்னும் பின்னும், காலத் தைக் கணக்கிடுகிறார்கள்.

அரேபியாவிற்கு மேற்கில் பாலஸ்தீனம் என்ற ஓர் நாடு இருக்கிறது. அங்கே நாஸரத் என்ற நக ரத்தில் ஜோஸப் என்பவரும் அவர் மனைவி மேரி என்பவரும் வாழ்ந்து வந்தார்கள். இவர்களுக்கு பெத்லஹேம் என்ற இடத்தில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக் குழந்தைக்கு ஏசு என்று பெய ரிட்டு அன்புடன் வளர்த்தார்கள்.

ஏசு, முப்பது வயது வரையில் தம் தகப்பனார், தொழிலாகிய தச்சு வேலையைச் செய்து வந்தார். அதற்குமேல் மக்கள் படும் துன்பத்தைக் கண்டு அவர்களை ரட்சிக்கச் சில கொள்கைகளைத் தம் மக்க ளுக்குப் போதிக்க ஆரம்பித்தார். அவரை அநேகர் பின்பற்ற ஆரம்பித்தார்கள். பின் தம் சிஷ்யர்களு டன் அவர் பல ஊர்களுக்குச் சென்று மக்களுக்கு நல்ல உபதேசங்கள் செய்தார்.

பாலஸ்தீனத்தில் யூதர்கள் என்ற ஓர் ஜாதியார் இருந்தார்கள். ஏசுவும் அக் கூட்டத்தைச் சேர்ந்தவர். ஆனாலும் யூதர்களின் குருமார்கள் ஏசுவின் உபதேசங்களை வெறுத்தார்கள். அவரை அழித்து விடவும் தீர்மானித்தார்கள். பாலஸ்தீன அரசனிடம் சென்று குருமார்கள் ஏசுவின்மேல் பல குற்றங்களைச் சுமத்தி வழக்கு தொடர்ந்தார்கள். அரசர் ஏசுவைக் கொலை செய்யும்படி உத்திரவு செய்ய அவர் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டார்.



ஏசுநாதரைச் சிலுவையில் அறைதல்

இறந்த மூன்றும் நாள் ஏசு சிலுவையிலிருந்து உயிர் பெற்று எழுந்தார். அவருடைய சிஷ்யர்கள் எல்லோரும் மகிழ்ச்சி அடைந்தார்கள். தம் போதனைகளை மக்களிடத்துப் பரவச் செய்யத் தம் சிஷ்யர்களை ஏவினர். ஏசுவிற்குக் கிறிஸ்து என்றும் ஓர் பெயர் உண்டு. ஆகவே அவர் போதித்த மதத்திற்குக் கிறிஸ்துவ மதம் என்று பெயர். உலகத்திலுள்ள பெரிய மதங்களில் இதுவும் ஒன்று. நம் தேசத்திலும் பல கிறிஸ்துவர்கள் இருக்கிறார்கள்.

கிறிஸ்து பிறப்பதற்கு முந்திய காலத்தைக் கி. மு. என்று குறிக்கிறோம். கி. மு. 50 என்றால்

கிறிஸ்துவுக்கு முன் 50 வருஷம் என்று கொள்ள வேண்டும். இதே மாதிரி கி.மு. 200 என்றால் கிறிஸ்துவுக்கு முன் 200 வருஷங்கள் என்று பொருள். கி. மு. 327-ல் அலெக்ஸாண்டர் இந்தியாவின்மேல் படை யெடுத்து வந்தார் என்றால் கிறிஸ்து பிறப்பதற்கு 327 வருஷங்களுக்கு முன்னால் அவர் இந்தியாவின் மேல் படையெடுத்தார் என்று பொருள்.

கிறிஸ்துவுக்குப் பிந்திய காலத்தைக் கி. பி. என்று குறிக்கிறோம். கிறிஸ்து பிறந்து இப்போது 1944 வருஷங்கள் ஆகின்றன. கிறிஸ்து பிறந்ததிலிருந்து கி.பி. வருஷங்கள் ஆரம்பமாகின்றன. இந்த வருஷம் கி. பி. 1944 ஆகும். கி. பி. 500 என்றால் கிறிஸ்துவுக்குப் பின் 500 வருஷங்கள் என்று பொருள்.

கேள்விகள் :

1. சரித்திரத்தில் வருஷங்கள் ஏன் முக்கியம் ?
2. உனக்குத் தெரிந்த சில சகாப்தங்களைக் கூறு.
3. ஏசு ஏன் கொல்லப்பட்டார் ?
4. கி. மு. 300-ம் வருஷம் என்றால் என்ன ?
5. கி. பி. 1200 என்றால் என்ன ?
6. கி. மு. 327-ல் அலெக்ஸாண்டர் இந்தியாமீது படையெடுத்தார். அது இன்றைக்கு எத்தனை வருஷங்களாகின்றன ?

---

5. குப்த அரசர்களின் பொற்காலம்

அசோகருக்குப் பிறகு சில நூறு ஆண்டுகள் வரை வட இந்தியாவில் பெரிய அரசர் ஒருவரும் தோன்றவில்லை. அங்கே பல சிறு ராஜ்யங்களே

இருந்தன. கடைசியாக கி. பி. 320-ல் மகத நாட்டில் ஓர் பெரிய அரசர் தோன்றினர். அவர்தான்



குப்த ராஜ்யம்

சந்திரகுப்தர் என்பவர். அவர் பெரிய வீரர். அவர்

பல ராஜ்யங்களை ஜெயித்துத் தன் நாட்டைப் பெரிதாக்கினார். இவர் ஸ்தாபித்த வம்சத்திற்கு குப்த வம்சம் என்று பெயர்.

அவருக்குப் பின் அவர் மகன் சமுத்திரகுப்தர் அரசர் ஆனார். அவர் பெரிய போர் வீரர். இவர் வட இந்திய நாடுகள் எல்லாவற்றையும் ஜெயித்தார். இவர் திக்விஜயம் செய்து கோசலம், கலிங்கம் முதலிய நாடுகளை ஜெயித்தார். பிறகு தென் இந்தியாவின் மேல் படை யெடுத்து மைசூர் வரையில் தன் அதிகாரத்தை நிலை நாட்டினார். அவர் புகழ் இந்தியா முழுவதும் பரவியது. அவர் தம் வெற்றிக்கு அறிகுறியாக ஓர் அஸ்வமேத யாகம் செய்தார். சமுத்திரகுப்தர் கல்வியிலும் சங்கீதத்திலும் தேர்ச்சி பெற்றவர். அவர் பல புலவர்களைத் தம் சபையில் ஆதரித்தார்.

சமுத்திர குப்தருக்குப் பிறகு அவர் குமாரர் இரண்டாம் சந்திரகுப்தர் அரசர் ஆனார். இவரது பாட்டனார் பெயரும் சந்திரகுப்தர். ஆகவே இவரை இரண்டாம் சந்திரகுப்தர் என்று அழைக்கிறோம். இவர் ஓர் சிறந்த போர்வீரர். இவர் மாளவம், கூர்ஜ்ஜரம், சௌராஷ்டிரம் முதலான ராஜ்யங்களை ஜெயித்துத் தம் ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டார். அவர் புகழ் நாடெங்கும் பரவியது. அவர் ராஜ்யம் இமயமலை முதல் நருமதை நதி வரையில் பரவியது. இவர் பெற்ற வெற்றியின் காரணமாக இவருக்கு விக்கிரமாதித்தியர் என்ற பெயர் ஏற்பட்டது.

குப்தர்கள் ஆண்ட காலத்தை நம் சரித்திரத்தில் பொற்காலம் என்று அழைக்கிறோம். அதற்குப்

பல காரணங்கள் உண்டு. இவர்கள் ஆட்சியில் குடிகள் சுகமாகவும், சந்தோஷமாகவும் வாழ்ந்து வந்தார்கள். நாட்டில் அமைதியும், செல்வமும் நிரம்பி இருந்தன. கல்வியும், புலவர்களும் நன்கு ஆதரிக்கப்பட்டார்கள். அவர்கள் ஆட்சியில் வியாபாரமும், கைத்தொழிலும் விருத்தி அடைந்தன. அவர்கள் பல சாலைகளைப் போட்டார்கள். பிரயாணிகளுக்கு வேண்டிய பலவித வசதிகள் செய்யப்பட்டன. இந்து மதம் செழிக்க ஆரம்பித்தது. விக்கிரமாதித்தியர் காலத்தில் வந்த **பாஹியன்** என்ற சீன யாத்ரீகர் குப்தர்களைப் புகழ்ந்திருக்கிறார்.

விக்கிரமாதித்தியரைப் பற்றி அநேக விநோதக் கதைகள் வழங்கிவருகின்றன. அவைகளெல்லாம் அவருடைய வீரச் செயல்களையும், புகழையும்காட்டுகின்றன. உஜ்ஜயினி என்ற நகரத்தில் பல புலவர்கள் இவர் காலத்தில் இருந்தார்கள். அவர்கள் விக்கிரமாதித்தியரால் ஆதரிக்கப்பட்டார்கள். அவர் சபையில் அநேக சிறந்த வித்வான்கள் இருந்தார்கள். அவர்களில் ஒன்பது பேர் மிக முக்கியமானவர். அவர்களை நவரத்தினங்கள் என்று சொல்லுவார்கள். அவர்களில் **காளிதாஸர்** என்பவர் முக்கியமானவர். அவர், சாகுந்தலம் என்னும் சிறந்த நாடகம் எழுதியவர். ஆர்யபட்டா என்ற கணித வித்வான் இக்காலத்தில்தான் இருந்தார். இன்னும் இக்காலத்தில் வைத்திய சாஸ்திரம், வான சாஸ்திரம் முதலியவை எழுதப்பட்டன.

குப்த அரசர்கள் காலம் இவ்வாறு மேன்மையாக இருந்தபடியினால்தான் நாம் அதைப் பொற்காலம் என்று அழைக்கிறோம்.

கேள்விகள் :

1. குப்த வம்சத்தை ஏற்படுத்தியவர் யார்?
2. சமுத்திரகுப்தரின் வெற்றிகள் யாவை?
3. அவருடைய ராஜ்ய விஸ்தீரணம் யாது?
4. விக்கிரமாதித்தியர் வெற்றிகள் யாவை?
5. அவர் ஆட்சி எவ்வாறு முக்கியமானது?
6. நவரத்தினங்கள் என்ருல் என்ன?
7. காளிதாஸர் எவ்வாறு புகழ்பெற்ருர்?
8. பாஹியன் என்பவர் யார்?
9. குப்தர் காலம் எவ்வாறு பொற்காலமாகும்?

---

6. ஹர்ஷவர்த்தனரும் அவர் சாம்ராஜ்யமும்

விக்கிரமாதித்தியருக்குப் பிறகு பல அரசர்கள் ஆண்டார்கள். அவர்கள் காலத்தில் குப்த ராஜ்யம் சீர்குலேயத் தலேப்பட்டது. ஹூணர் என்ற முரட்டு ஜாதியார் படையெடுத்து வந்து குழப்பம் விளேவித்தார்கள். அநேக சிறு ராஜ்யங்கள் தோன்றின. கடைசியாகத் தானேஸ்வரத்தில் பிரபாகர வர்த்தனர் என்பவர் தோன்றி, நாட்டில் அமைதியை ஏற்படுத்தினுர்.

பிரபாகர வர்த்தனருக்கு ராஜ்யவர்த்தனர், ஹர்ஷர் என்ற இரண்டு பிள்ளேகளும், ராஜ்யஸ்ரீ என்ற ஓர் பெண்ணும் உண்டு. ராஜ்யவர்த்தனருக்குப் பிறகு கி. பி. 606-ல் ஹர்ஷவர்த்தனர் அரசராஞர். ஹர்ஷர் வட இந்தியா முழுவதையும் ஜெயித்தார். அவர் நாட்டிலுள்ள எல்லா கலகங்களேயும் அடக்கினுர்.

ஹர்ஷரின் சகோதரி ராஜ்யஸ்ரீ கன்னோசி அரசரான கிருஹவர்மனை மணந்திருந்தாள். மாளவ



ஹர்ஷ சாம்ராஜ்யம்

நாட்டு அரசர் கன்னோசியின்மேல் படையெடுத்து கிருஹவர்மனைக் கொன்று, அவர் மனைவி ராஜ்யஸ்ரீ

யைச் சிறை செய்தார். இதைக் கேட்ட ஹர்ஷர் ஓர் பெரும் சேனையுடன் மாளவ தேச அரசனுடன் போர் செய்யச் சென்றார். மாளவ அரசன் ராஜ்யஸ்ரீ யை விந்திய மலைக்கருகே விடுதலை செய்து விட்டார். ராஜ்யஸ்ரீ தீயில் விழுந்து உயிர்விடத் தயாராக இருந்த சமயத்தில் ஹர்ஷர் அவரைக் காப்பாற்றினார். கன்னோசி ராஜ்யம் ஹர்ஷ ராஜ்யத்தோடு சேர்த்துக் கொள்ளப்பட்டது.

இதன் பிறகு ஹர்ஷர் தானேஸ்வரத்தைவிட்டு கன்னோசியை தமது தலைநகர மாக்கிக்கொண்டார். அந்நகரில் அவர் கோட்டைகளையும், அரண்மனையையும், மண்டபங்களையும் கட்டினார்.

ஹர்ஷர் தாம் தென் இந்தியாவையும் ஜெயிக்க வேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. ஆகவே அவர் விந்திய மலையைத் தாண்டித் தென் இந்தியாவின் மேல் படை யெடுத்துச் சென்றார். அச்சமயத்தில் அங்கே புலிகேசி என்ற அரசர் ஆண்டு வந்தார். அவர் சாளுக்கிய வம்சத்தைச் சேர்ந்தவர். வாதாபி என்னும் நகரம் அவருடைய தலைநகரம். அவர் ஹர்ஷரை எதிர்த்தார். இருவருக்கும் நர்மதை நதிக்கரையில் சண்டை நடந்தது. ஹர்ஷர் தோல்வியுற்றுத் தம் நாடு திரும்பினார்.

ஹர்ஷர் ஓர் சிறந்த கல்விமான். அவர் கற்றோர்களை மிகவும் ஆதரித்தார். அவர் சமஸ்தான பண்டிதர்களில் பாணர் என்பவர் ஒருவர். அவர் ஹர்ஷ சரிதம் என்னும் நூலை எழுதியிருக்கிறார். ஹர்ஷரே சில காவியங்களையும், நாடகங்களையும் எழுதியிருக்கிறார். ரத்னாவளி என்ற அவருடைய நாடகம்,மிகவும்

சிறந்தது. நைடதம் என்னும் நளன் கதையும் அவரால் எழுதப்பட்டது. அவர் காலத்தில் நாளந்தா, தக்ஷசீலம், காசி, உஜ்ஜயினி முதலிய இடங்களில் சர்வகலாசாலைகள் இருந்தன. கல்வி அதிகமாகப் பரவி இருந்தது.

ஹர்ஷர் பௌத்த மதத்தைப் பெரிதும் ஆதரித்தார். ஆயினும் அவர் எல்லா மதத்தினர்களையும் அன்புடன் நடத்தி வந்தார். அவருக்கு மத ஆராய்ச்சியில் விருப்பம் அதிகம். அவர் ஒவ்வொரு வருஷமும் கன்னோசியில் ஓர் சபை கூட்டுவது வழக்கம். அங்கே பல பண்டிதர்கள் கூடி மத ஆராய்ச்சி செய்வார்கள். ஹர்ஷரும் அவைகளில் கலந்து கொள்வார். அவர் அச்சமயங்களில் பண்டிதர்களுக்கு ஏராளமாகத் தானம் செய்வார்.

ஹர்ஷர் காலத்தில் சீனாவிலிருந்து **யுவான் சுவாங்** என்ற ஓர் யாத்திரிகர் இந்தியாவிற்கு வந்தார். அவர் பௌத்த நூல்களைச் சேகரிக்கவும், புத்த புண்ணிய ஸ்தலங்களைத் தரிசிக்கவும் வந்தார். ஹர்ஷர் அவரை நன்கு வரவேற்று உபசரித்தார். அவர் நம் நாட்டில் 15 வருஷங்கள் தங்கிப் பல இடங்களைக் கண்டார். அவர் அக்கால மக்களின் வாழ்க்கையைப் பற்றி எழுதியிருக்கிறார்.

ஹர்ஷரின் ஆட்சி காலம் சிறந்த காலமாகும்.

கேள்விகள் :

1. ஹர்ஷரின் தகப்பனார் யார்?
2. ஹர்ஷ ராஜ்ய விஸ்தீரணம் என்ன?
3. அவருடைய தலை நகரம் எது?
4. அவர் ஏன் கன்னோசியின் மேல் படையெடுத்தார்?

5. புலிகேசி யார்? அவருக்கும் ஹர்ஷருக்கும் எங்கே சண்டை நடந்தது? ஏன்?

6. ஹர்ஷர் எழுதிய நூல்கள் யாவை?

7. பாணர் என்பவர் யார்? யுவான் சுவாங் என்பவர் யார்?

8. யுவான் சுவாங் ஏன் நம் நாட்டிற்கு வந்தார்?

9. ஹர்ஷர் ஆட்சியின் மேன்மை என்ன?

---

7. முகம்மது நபி

நம் நாட்டின் மேற்கில் அரேபியா என்னும் தேசம் இருப்பதைக் கவனியுங்கள். அது ஒரு செழிப்பில்லாத நாடு. அங்கே வாழ்க்கை மிகவும் கஷ்டம். அங்குள்ள மக்கள் ஆடு மாடுகள் மேய்த்தும், வியாபாரம் செய்தும் கஷ்ட ஜீவனம் செய்தும் வந்தார்கள். அவர்களுக்கு அராபியர்கள் என்று பெயர். அரேபியாவின் தலைநகரம் **மெக்கா** என்னும் நகரம். அங்கே அப்துல்லா என்று பெரியார் ஒருவர் இருந்தார். அவரது மனைவியின் பெயர் அமீனா. இவர்களுக்கு கி. பி. 570-ல் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. இக்குழந்தை பிறந்தவுடன் வானத்தில் சில அற்புதக் குறிகள் தோன்றினவாம். இக்குழந்தையே உலகம் புகழும் **முகம்மது** என்பவர்.

சிறு வயதிலிருந்தே முகம்மது நல்ல குணமுடையராகவும் எல்லோரிடத்தும் அன்பாகவும் இருந்தார். அவர் தம்முடைய 25-வது வயதில் கதிஜா என்னும் ஓர் பணக்கார விதவையிடம் வேலைக்கு அமர்ந்தார்.

கதிஜா அம்மையார் எல்லா நற்குணங்களும் பொருந்தியவர். அவர் முகம்மதுவின் நற்குணங்களையும் அன்பையும் கண்டு மகிழ்ந்தார். முகம்மது உண்மையுடன் வேலை செய்து வியாபாரத்தில் புகழ் பெற்ருர். இதைக் கண்டு கதிஜா மிகவும் சந்தோஷித்தார். கடைசியில் கதிஜா முகம்மதுவை மணம் செய்து கொண்டார்.

முகம்மது கதிஜாவுடன் குடும்ப வாழ்க்கை நடத்திய போதிலும் அவர் மனம் எப்போதும் கடவுளையே நாடியது. அவர் தினம் மலைக் குகையில் உட்கார்ந்து கடவுளைத் தியானம் செய்வது உண்டு. ஒரு நாள் அவருக்குக் கடவுள் தரிசனம் கிடைத்தது. அவருக்கு அராபியர்களுடைய குணங்களில் வெறுப்பு ஏற்பட்டது. அவர்கள் பல தெய்வங்களை வணங்கி விக்ரஹ பூஜை செய்வதைக் கண்டு வருந்தினுர். அவர் தம் கொள்கைகளை மக்களுக்கு உபதேசிக்க ஆரம்பித்தார். அராபியர்களை நல்வழிப் படுத்துவதற்காக அவர்களுக்குப் பின் வரும் உபதேசங்களைச் செய்தார்.

"கடவுள் ஒருவரே. அவருக்கு உருவம் கிடையாது. அவரை எல்லோரும் வணங்கவேண்டும். அவர் முன் எல்லோரும் சகோதரர்கள். எல்லோரும் சமம். விக்கிரகங்களை வணங்குவது பாவம். யாரும் மதுபான செய்யக்கூடாது. எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டவேண்டும். தினந்தோறும் ஐந்து முறை கடவுளை வணங்க வேண்டும்."

அராபியர்கள் முதலில் இந்தக் கொள்கைகளை விரும்பவில்லை. அவைகள் தங்கள் பழக்க வழக்கங்

களை மாற்றிவிடுகின்றனவென்று முகம்மது மீது கோபம் கொண்டார்கள். அவரைக் கொல்லவும் துணிந்தார்கள். ஆகவே முகம்மது கி. பி. 622-ல் மெக்காவிலிருந்து **மெதினுவிற்கு** ஓடிவிட்டார். அங்கிருந்த மக்கள் முகம்மதுவை வரவேற்ருர்கள். அவர் உபதேசங்களைக் கேட்டு அவருடைய சிஷ்யர்களாஞர்கள். முகம்மது மெக்காவை விட்டு மெதினுவுக்குச் சென்றதற்கு **ஹிஜிரா** என்று பெயர். இதிலிருந்துதான் முகம்மதியர்கள் தங்கள் வருஷங்களைக் கணக்கிடுகிருர்கள். ஹிஜிரா 500 என்ருல் முகம்மது மெக்காவை விட்டுச் சென்று 500 வருஷங்கள் ஆனது என்று பொருள்.

சில வருஷங்கள் கழித்து முகம்மது மெக்காவிற்குச் சென்று, அங்குள்ள மக்களையும் தம் வழிப்படுத்திஞர். கடவுளை அடைவதற்கு முகம்மது காட்டிய மார்க்கத்திற்கு **இஸ்லாம்** என்று பெயர். அதைப் பின்பற்றுகிறவர்களுக்கு முஸ்லிம்கள் என்று பெயர். நம் நாட்டிலும் இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுபவர்கள் அனேகர் இருக்கின்றனர். அவர்கள் எல்லோரும் இந்தியர்கள்.

கேள்விகள் :

1. அராபியர்கள் எவ்வாறு வாழ்ந்து வந்தனர் ?
2. முகம்மதுவின் பெற்ருேர்கள் யார் ?
3. முகம்மதுவின் குண விசேஷம் என்ன ?
4. கதிஜா என்பவர் யார் ?
5. முகம்மதுவின் போதனைகள் யாவை ?
6. முகம்மது எங்கே ஓடினுர் ? ஏன் ?
7. ஹிஜிரா என்ருல் என்ன ?

8. பல்லவர்கள் : மகாபலிபுரம்

தென் இந்தியாவில் புலிகேசி என்பவர் ஆண்டுகொண்டிருந்தார் என்று ஏற்கனவே படித்தீர்கள். அதே காலத்தில் தென் நாட்டில் காஞ்சீ



தென் இந்தியா

புரத்தைத் தலைநகராகக் கொண்டு ஓர் வம்சத்தினர் ஆண்டார்கள். அவர்கள் தான் பல்லவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் யார் என்பதும் எங்கிருந்து வந்தார்கள் என்றும் தெரிய

வில்லை. அவர்கள் ஆரிய முறைகளைக் கைக்கொண்டார்கள். அவர்கள் ஜைன சமண மதங்களைப் பின்பற்றினார்கள். ஆகவே அவர்கள் நம் நாட்டு மக்களே யாவர்.

அக்காலத்தில் பல்லவ ராஜ்யம் கிருஷ்ண நதி முதல் காவிரி நதி வரையில் பரவி இருந்தது. அவர்கள் தலைநகராகிய காஞ்சீபுரம் மிகவும் மேன்மையாக விளங்கியது. அங்கே பல அழகான கட்டிடங்கள் தோன்றின. பல்லவர்கள், நாடு ஆள்வதில் மிகவும் சமர்த்தர்கள். அவர்கள் தென்னாட்டில் ஆரிய நாகரீகத்தையும், சம்ஸ்கிருதக் கல்வியையும் பரப்பினர்.

பல்லவ அரசர்களில் ஒருவரான சிம்ம விஷ்ணு என்பவர் தமிழ் நாட்டை ஆண்டு வந்த சேர, சோழ, பாண்டியர்களை வென்றார். அவருடைய குமாரர் தான் புகழ்பெற்ற மகேந்திர வர்மன் ஆவார்.

மகேந்திரர் ஓர் முறை புலிகேசியுடன் போர் புரிந்து தோற்றுவிட்டார். இவர் பல மலைக் கோயில்களைக் கட்டினார். அரக்கோணத்திற்கு அருகிலுள்ள மஹேந்திரவாடி என்ற கிராமம் இவரால் உண்டாக்கப்பட்டது. இவர் விவசாயத்தை அபிவிருத்தி செய்யப் பல குளங்கள் வெட்டினார். அவைகளில் காஞ்சீபுரத்திற்கு அருகிலுள்ள மாமண்டூர் முக்கியமானது.

மகேந்திர வர்மன் முதலில் ஜைன மதத்தைச் சேர்ந்திருந்தான். இந்த அரசர் காலத்தில் காஞ்சீபுரத்தில் அநேக ஜைனர்கள் இருந்தார்கள். அதே



மகாபலிபுரம் கோயில்கள்

காலத்தில் அநேக சைவப் பெரியார்கள் தோன்றினார்கள். அப்பர் என்ற நாயன்மாரின் உபதேசத்தினால் அரசர் சைவரானார்.

இதே காலத்தில் வைஷ்ணவ மதமும் பிரபலமடைய ஆரம்பித்தது. மகேந்திரர் சைவ மதத்தைத் தழுவினபோதிலும் அவர் எல்லா மதத்தினர்களையும் சமமாகவே பாவித்தார். அவர் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் பல கோயில்கள் கட்டினார். காஞ்சீபுரத்துக் கோயில்கள் சில அவரால் கட்டப்பட்டன.

மகேந்திர வர்மனுக்குப் பிறகு அவர் குமாரர் நரசிம்ம வர்மன் பட்டத்துக்கு வந்தார். இவர் தந்தையைக் காட்டிலும் மிகச் சிறந்தவர். இவர் தமிழ் மூவேந்தர்களை அடக்கினார். இவர் ஹர்ஷரையே தோற்கடித்த பராக்கிரமசாலியான புலிகேசியைத் தோற்கடித்தார். அவர் போரில் எப்போதும் வெற்றி பெற்றதாலும், மல் யுத்தத்தில் தேர்ச்சி பெற்றவராதலாலும் அவருக்கு மாமல்லர் என்ற பெயர் ஏற்பட்டது. அவர் சென்னைக்குத் தெற்கே கடற்கரையோரத்தில் **மாமல்லபுரம்** என்ற ஓர் சிறந்த துறைமுகத்தை ஏற்படுத்தினார். அவர் காலத்தில் யுவான் சுவாங் என்பவர் காஞ்சீபுரத்திற்கு விஜயம் செய்தார்.

மாமல்லபுரம் இப்போது மகாபலிபுரம் என்று அழைக்கப்படுகிறது. அது ஏழு கோயில் பட்டணம். அவ்வூரை இந்துக்கள் ஓர் புண்ணிய க்ஷேத்திரமாகக் கருதுகிறார்கள். அங்குள்ள கோயில்களில் இருக்கும் கல் சித்திரங்கள் பார்க்க வியக்கத்தக்கவை.

பொருந்தியிருந்தன. போரில் வெற்றிபெருவிட்டால் உயிரை விட்டு விடுவார்கள். இவர்கள் தங்கள் பெண் களின் கௌரவத்தை மிகவும் காப்பாற்றினுர்கள்.

ராஜபுத்திர மாதர்களும் வீரம் பொருந்தியவர் கள். இவர்கள் உயிரினும் கற்பே சிறந்ததென்று கருதினர். இவர்கள் தங்களுடைய புருஷர்களை உற்சாகப்படுத்திச் சண்டைக்கு அனுப்புவார்கள். புருஷர்கள் இறந்துவிட்டால் ராஜபுத்திரப்பெண்கள் உடன்கட்டை ஏறுவார்கள். தங்கள் கோட்டை களும், நகரங்களும் விரோதிகளிடத்து சிக்கினுல் மாதர்கள் ஒரு பெரும் தீ வளர்த்து, அதில் விழுந்து மடிவார்கள். இந்த வழக்கத்திற்கு ஜேஹர் என்று பெயர்.

ராஜபுத்திரர்களிடத்துப் பல அரிய நற்குணங் கள் இருந்தபோதிலும் ஓர் பெரிய துர்க்குணம் இருந் தது. அவர்களிடத்தில் ஒற்றுமை கிடையாது. ஒருவரோடு ஒருவர் சண்டை செய்துகொண்டே இருந்தார்கள். ஆகவே அவர்கள் தங்கள் பெருமை யையும் ராஜ்யங்களையும் இழந்துவிட்டார்கள்.

ராஜபுத்திர ராஜ்யங்கள் இருந்த இடத்திற்கு ராஜபுதனம் என்று பெயர். எட்டாம் நூற்ருண்டிலி ருந்து பன்னிரண்டாம் நூற்ருண்டு வரையில் சுமார் 500 வருஷ காலம் ராஜபுத்திரர்கள் மேன்மையுற்று இருந்தார்கள். ஹர்ஷருக்குப் பின் இருந்த ஹிந்து அதிகாரிகள் இவர்களே ஆவர். இவர்களுடைய முக் கிய ராஜ்யங்கள் டில்லி, ஆஜ்மீர், மாளவம், கன் னேசி, மீவார் முதலியன. டில்லி, ஆஜ்மீர் என்ற நாடுகளுக்கு அரசர் பிருதிவிராஜன். அவர் கன்

ஞ்சேசி அரசன் மகளான **சம்யுக்தை**யை மணந்து கொண்டார். இவர் காலத்தில்தான் முகம்மதியர்கள் நம் நாட்டின்மேல் படையெடுத்து வந்து வென்ருர்கள். மாளவ தேச முக்கிய அரசர் போஜராஜன். இவர் கல்வியை மிகவும் ஆதரித்தார்.

இப்போது ராஜபுதனத்தில் ஆங்கிலேயருக்கு உட்பட்ட பல ராஜபுத்திர சமஸ்தானங்கள் இருக்கின்றன.

கேள்விகள் :

1. ராஜபுத்திரர்கள் யார்?

2. அவர்களுக்கு அக்கினி குலத்தினர் என்று ஏன் பெயர் ஏற்பட்டது?

3. அவர்களின் குணங்கள் யாவை?

4. அப் பெண்களின் மேன்மை யாது?

5. ராஜபுத்திர ராஜ்யங்கள் அழியக் காரணமென்ன?

6. ராஜபுத்திர ராஜ்யங்கள் சிலவற்றைக் கூறுக.

---

10. முகம்மதியர் படையெடுப்பு

அராபியர்கள் முகம்மதியர்கள் ஆனதைப்பற்றி முன்பு படித்தோம். அவர்கள் தங்கள் புதிய மதத்தில் அதிகப் பற்றுகொண்டு அம்மதத்தை எல்லா தேசங்களிலும் பரப்ப ஆசை கொண்டார்கள். ஆகவே அவர்கள் எகிப்து, ஸ்பெயின், ஸிரியா, ஈராக், பாரசீகம் முதலிய நாடுகளை ஜெயித்து முகம்மதிய மதத்தை அத்தேசங்களில் பரப்பினார்கள். கொஞ்ச காலம் கழித்து இந்தியாவின் செல்வத்தையும் செழுமையையும்பற்றிக் கேட்டு நம் நாட்டிற்கும் வந்தார்கள்.

மகாபலிபுரத்தில் பஞ்ச பாண்டவர்கள் ரதம், கடற்கரையிலுள்ள கோயில், கற்பாறைகள் மீது செதுக்கப்பட்டிருக்கும் பல அழகிய சிற்ப வேலைகள் முதலியவைகளைக் காண மக்கள் எல்லா நாட்டிலிருந்தும் வருகிறார்கள்.

காஞ்சீபுரத்திலும் நரசிம்ம வர்மர் சிறந்த கட்டிடங்கள் கட்டினார். அங்குள்ள ஏகாம்பரேஸ்வரர் கோயில், அவரால் கட்டப்பட்டது. நரசிம்ம வர்மனுக்குப் பிறகு பல்லவ ஆட்சியின் மேன்மை குன்றிவிட்டது. சோழ அரசர்கள் பல்லவர்களை அடக்கி, மீண்டும் ஆட்சி புரியலாயினர்.

கேள்விகள் :

1. பல்லவர்களின் முதல் அரசர் யார்?

2. அவர்களின் ராஜ்ய விஸ்தீரணம் என்ன? தலைநகரம் எது?

3. மகேந்திர வர்மன் எவ்வாறு புகழ்பெற்றார்?

4. நரசிம்ம வர்மனுக்கு ஏன் மாமல்லன் என்ற பெயர் வந்தது?

5. அவர் யாரைத் தோற்கடித்தார்? அவர் தலை நகருக்கு யார் விஜயம் செய்தார்?

6. மகாபலிபுரத்திலுள்ள அற்புதங்கள் யாவை?

7. நரசிம்ம வர்மனுக்குப் பிறகு பல்லவ வம்சத்தின் கதி என்னவாயிற்று?

9. ராஜபுத்திரர்கள் : அவர்களுடைய குணாதிசயங்கள்

அநேக நூற்றாண்டுகளுக்கு முன்பு நம் நாட்டில் பல அந்நியர்கள் படையெடுத்து வந்தார்கள். அவர்களில் முக்கியமானவர் சாகர், பல்லவர், ஹூணர். இவர்கள் நம் நாட்டிலேயே தங்கி ஹிந்து மதத்தையும், பழக்க வழக்கங்களையும் பின்பற்ற ஆரம்பித்தார்கள். இவர்கள் மிகவும் பலமுள்ளவர்கள். இவர்களை க்ஷத்திரியர்கள் என்று அழைக்கிறோம். இவர்கள் அல்லாமல் பழைய அரச வம்சத்தைச் சேர்ந்த பல வீரர்கள் இருந்தார்கள். இவர்கள் எல்லோரும் ஆரியப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றினார்கள். இவர்கள் நம் நாட்டு மக்களுடன் விவாக சம்பந்தமும் ஏற்படுத்திக் கொண்டார்கள். இவர்களுக்கு ராஜபுத்திரர்கள் என்று பெயர்.

ராஜபுத்திரர்களின் பிறப்பைப் பற்றி ஓர் கதை வழங்கி வருகிறது. ராஜபுதனத்தில் அபு என்று ஓர் மலையுள்ளது. அங்குள்ள மகரிஷிகள் ஓர் யாகம் செய்தார்கள். அக்கினிக் குண்டத்திலிருந்து நான்கு வீரர்கள் தோன்றினார்கள். அவர்களுடைய சந்ததியார்களே அக்கினி குல க்ஷத்திரியர்கள் என்று சொல்லுகிறார்கள்.

ராஜபுத்திரர்கள் ஹிந்து மதத்தை ஆதரித்தார்கள். அவர்கள் சிறந்த வீரர்கள். போரில் முன் வைத்த காலைப் பின்வைக்கமாட்டார்கள். இவர்களிடத்தில் வீரம், கௌரவம், அன்பு, கொடை, உண்மை முதலான மேன்மையான குணங்கள்

முதல் முதலாக நம் நாட்டிற்கு வந்த முகம்மதியர்கள் அராபியர்கள். முதலில் வியாபாரம் செய்துகொண்டிருந்த அராபியர்கள் பின்னால் தங்கள் மதத்தைப் பரப்ப ஆசைகொண்டார்கள். அவர்கள் முதலில் சிந்து நாட்டை முகம்மதுபின் காஸிம் என்பவரின் தலைமையில் கைப்பற்றிக் கொண்டனர். அச்சமயம் சிந்து நாட்டு மன்னர் தாஹூர் என்பவர்.

அவர் தாஹூரைக்கொன்று சிந்து நாட்டின் துறைமுகமான துபால் என்ற பட்டணத்தைக் கைக்கொண்டார். இதுவே முதல் முகம்மதியப் படையெடுப்பு. சுமார் 200 வருஷ காலம் சிந்துவை அராபியர்கள் ஆண்டு வந்தார்கள்.

ஆப்கானிஸ்தானத்தில் கஜினி என்ற பட்டணம் சிறந்து விளங்கியது. அதை ஸபக்டிஜின் என்பவர் ஆண்டுவந்தார். அவர் மகன்தான் கஜினி முகம்மது என்பவர்.

கஜினி முகம்மது இந்தியாவின் செல்வத்தைப் பற்றிக் கேட்டிருந்தார். அவர் நம் நாட்டின் மீது பலமுறை படையெடுத்து அநேக நகரங்களை அழித்தும், கோயில்களைக் கொள்ளையிட்டும் சென்றார். சில ராஜபுத்திரர்கள் அவரை எதிர்த்தனர். ஆனால் அவர்களிடத்து ஒற்றுமை யில்லாததால் தோல்வி யுற்றார்கள். கன்னோசி, மதுரா, சோமநாத் முதலிய ஊர்களைக் கொள்ளையிட்டு ஏராளப் பொருள்களுடன் தம் நாட்டிற்குச் சென்றார்.

சிறிது காலம் கழித்து கஜினி ராஜ்யம் அழிந்து, ஆப்கானிஸ்தானத்தில் கோரி என்ற பட்டணத்தில் ஓர் ராஜ்யம் ஏற்பட்டது. அதன் அரசர் முகம்மது என்பவர். அவரைக் கோரிமுகம்மது என்பார்கள். அவர் இந்தியாவை ஜெயித்து ஓர் முகம்மதிய ராஜ்யத்தை இங்கே ஏற்படுத்த எண்ணங்கொண்டார். ஆகவே ஓர் பெரிய படையுடன் பஞ்சாப் வழியாக டில்லிக்கு வந்தார். அப்போது டில்லியை ஆண்டு வந்த பிருதிவிராஜன் என்பவர் தானேஸ்வரம் என்ற இடத்தில் அவரைத்தோற்கடித்தார்.

கோரி முகம்மது

கோரி தம் நாட்டிற்குத் திரும்பினர். ஆனல் மறு வருஷம் திரும்பிவந்து சில ராஜபுத்திரர்களின் உதவியால் பிருதிவிராஜனைக் கொன்று டில்லியைக் கைப்பற்றினர். அங்கே தன் ராஜ்யத்தை ஸ்தாபித்துச் சென்றார். இது முதற்கொண்டு டில்லி முகம்மதியர் வசமாயிற்று.

அவருக்குப் பின்னல் சுமார் 300 வருஷ காலம் டில்லியில் ஆப்கானிய வம்சத்தினர் ஆண்டு வந்தார்கள். அவர்களில் கடைசி வம்சம் லோடி வம்சம். அவ்வம்சத்துக் கடைசி அரசனை **பாபர்** என்ற மொக

லாயர் பானிப்பட்டு என்ற இடத்தில் 1526-ல் தோற்கடித்தார். இதன் பயனாக ஆப்கானிய வம்சம் அழிந்து, டில்லியில் முகலாய ஆட்சி ஏற்பட்டது.

நம் நாட்டின்மேல் படையெடுத்து வந்த முகம்மதியர்கள் இங்கேயே தங்கி விட்டார்கள். இவர்கள் நம் நாட்டினருடன் கலந்து தங்கள் மதத்தில் அநேகரைச் சேர்த்துக் கொண்டனர். இவர்கள் ஜனத்தொகையில் ஆறில் ஓர் பங்கு உள்ளனர். இவர்கள் மதம் வேறு ஆனாலும் இவர்களும் இந்தியர்களே. இவர்கள் மற்ற மதத்தினர்களோடு ஒன்று சேர்ந்து நாட்டின் நலத்தைக் கருத வேண்டும்.

கேள்விகள் :

1. முகம்மதியர்கள் ஏன் நம் நாட்டின்மேல் படையெடுத்தார்கள் ?
2. முகம்மது காஸிம் யார் ?
3. கஜினி முகம்மது ஏன் படையெடுத்தார்? அவர் கொள்ளையடித்த பட்டணங்கள் யாவை ?
4. கோரி யாருடன் போர் புரிந்தார் ? எங்கே ?
5. டில்லியில் ஆண்ட முதல் முகம்மதிய அரசர் யார்?
6. படையெடுத்து வந்த முகம்மதியர்கள் ஏன் இங்கேயே தங்கிவிட்டார்கள் ?

11. கிருஷ்ணதேவ ராயர்

பெல்லாரி ஜில்லாவில் துங்கபத்ரா நதிக் கரையில் ஹம்பி என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அதைச் சுற்றிப் பல பாழ் அடைந்த கட்டிடங்களும் அரண்மனைகளும், கோயில்களும், அகழிகளும் காணப்படுகின்றன. அந்த இடத்தில் சுமார் 400 வருஷங்களுக்குமுன் ஓர் பெரிய நகரம் இருந்தது. அதன் பெயர் விஜயநகரம். அதைச் சுற்றி ஒரு பெரிய ஹிந்து ராஜ்யம் இருந்தது.

வட இந்தியாவில் முகம்மதிய ராஜ்யம் ஏற்பட்ட பிறகு அவர்கள் அடிக்கடி தென் இந்தியாவின்மேல் படையெடுத்து வந்தார்கள். அல்லாவுதீனின் சேனைத் தலைவர் தென்னிந்திய அரசர்கள் பலரைத் தோற்கடித்தார். பிறகு முகம்மது துக்ளக் வாரங்கல் நாட்டைக் கைப்பற்றினார். இவைகளைக் கண்டு பயந்து தென் இந்தியாவில் ஹிந்துக்கள் ஓர் ராஜ்யத்தை ஏற்படுத்தினார்கள்.

ஹரிஹரர், புக்கர் என்ற இரண்டு சகோதரர்கள், தங்கள் குருவின் உபதேசத்தின்பேரில் துங்கபத்ரா நதியின் தென் கரையில் விஜயநகர ராஜ்யத்தை உண்டாக்கினார்கள். சீக்கிரத்தில் அந்த ராஜ்யம் சிறப்புற்றது. அதன் விஸ்தீரணம் தெற்கே பரவியது. அரசர்களுக்கு ராயர் என்ற பட்டம் ஏற்பட்டது.

விஜயநகர அரசர்களுள் மிகவும் கீர்த்தி வாய்ந்தவர் கிருஷ்ண தேவ ராயர். அவர் கி. பி. 1509 முதல் கி. பி. 1530-வரை ஆண்டார். அவர் அதிக

பலமும், அழகும் பொருந்தியவர். அவர் போர்களில் தோற்றதே கிடையாது.

அவர் மைசூர், பாண்டிய நாடு, ஒரிஸ்ஸா, கோல்கொண்டா முதலிய நாடுகளை ஜெயித்துத் தன் நாட்டுடன் சேர்த்துக் கொண்டார். பிறகு பீஜப்பூர் சுல்தானிடமிருந்து ரெய்ச்சூர் மாகாணத்தைக்

கிருஷ்ணதேவ ராயர்

கைப்பற்றினார். இவ்வாறு தென் இந்தியா முழுவதும் அவர் ஆட்சிக்குள் வந்தது.

கிருஷ்ணதேவ ராயர் சிறந்த கல்விமான். அவர் சம்ஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் அதிக தேர்ச்சி

பெற்றவர். அவர் தம்முடைய சபையில் அநேக வித்வான்களை வைத்து ஆதரித்தார். அவர்களில் எட்டு பேர்கள் மிகவும் முக்கியமானவர்கள். அவர் களுக்கு அஷ்ட திக்கு கஜங்கள் என்று பெயர். **அல்லஸானி பெத்தண்ண** என்னும் தெலுங்குக் கவி, ராய ருடைய மந்திரியான **திம்மரசு**, விகடகவி **தென்னலி ராமன்** முதலியோர் அந்த எண்மரில் சேர்ந்தவர்கள்.

கிருஷ்ணதேவ ராயர் அதிக தெய்வபக்தியுடை யவர். தலைநகரத்தில் ஏராளமான செலவில் அநேக கோயில்களையும் சத்திரங்களையும் கட்டினார்.

கிருஷ்ணதேவ ராயர் வைஷ்ணவர். ஆனால் மதத் துவேஷம் கிடையாது. எல்லா மதத்தின ரிடத்தும் அன்பாக இருந்தார். பகைவர்களையும் அன்பாக நடத்தினார். அவரைக் குறித்து ஆந்திர தேசத்தில் பல கதைகள் வழங்குகின்றன. அவர் கி. பி. 1530-ல் இறந்தார். அவருடன் அவர் ராஜ யத்தின் புகழும் குறையலாயிற்று.

கேள்விகள் :

1. விஜயநகரம் ஏன் ஏற்பட்டது? எங்கே?
2. அது யாரால் ஏற்பட்டது? அதில் பெரிய அரசர் யார்?
3. கிருஷ்ணதேவ ராயரின் குணம் யாது?
4. அவர் ஜெயித்த நாடுகள் யாவை?
5. அவர் எவ்வாறு கல்வியை ஆதரித்தார்?
6. அவர் செய்த நன்மைகள் யாவை?

12. அக்பர்

இந்தியாவில் முகலாய ஆட்சியை ஏற்படுத்திய வர் பாபர் என்று ஏற்கனவே அறிவீர்கள். அவர் சிறிது காலமே ஆண்டார். அவருக்குப் பிறகு அவர் குமாரர் ஹுமாயூன் அரசரானார். ஹுமாயூனின் மகன்தான் அக்பர். இவர் அமரக்கோட்டையில் பிறந்தார். தன் பிதா இறக்கும்போது அக்பருக்கு வயது பதினான்கு. ஆகவே அக்பரின் உறவினரும் குருவுமான பைராம்கான் என்பவர் அக்பருக்காக ஹிந்துஸ்தானத்தைக் கைப்பற்றி ஆட்சி செய்தார்.

அக்பர் பல மேன்மையான குணங்கள் படைத்தவர். அவர் அகன்ற மார்பும், பருத்த தோள்களும் நீண்ட கைகளும் உடையவர். நீந்துவதிலும் குதிரைச் சவாரி செய்வதிலும், போலோ பந்தாட்டத்திலும் அவருக்கு விருப்பம் அதிகம். அவர் ஆடம்பரம் அற்றவர். அவர் மரியாதையாகவும் அன்பாகவும் எல்லோரிடத்தும் நடந்து கொண்டார்.

அக்பர்

அக்பரின் ராஜ்யம் முதலில் சிறியதாக இருந்தது. அக்பர் ஓர் பெரிய படையைத் தயாரித்து வங்காளம், மாளவம், கூர்ஜ

ஜரம் முதலிய நாடுகளை ஜெயித்தார். மீவார் நாட்டின் தலைநகராகிய சித்தூரை பலமுறை முற்றுகை செய்து கடைசியில் அந்நகரைப் பிடித்தார். அந்தப் போரில் ராஜபுத்திரர்களின் வீரத்தை அவர் நன்கு அறிந்தார்.

ராஜபுத்திரர்களையும் மற்ற ஹிந்துக்களையும் விரோதித்துக் கொண்டால் முகலாய ஆட்சி இந்தியாவில் நிலைக்காது என்று அக்பர் தெரிந்து கொண்டார். ஆகவே அவர்களின் நட்பை அக்பர் நாடினார். அவர் ராஜபுத்திரப் பெண்களை மணந்து கொண்டார். தமது பிள்ளைகளுக்கும் அவ்வாறே மணம் செய்வித்தார். இந்துக்களுக்கு அரசாங்கத்தில் பெரிய உத்தியோகங்கள் கொடுத்தார். ராஜா மான்சிங், ராஜா பிர்பால் என்பவர்கள் அவருடைய சேனாதிபதிகள். ராஜா பகவன்தாஸ் அவருடைய சிறந்த மந்திரி. ராஜா தோடர்மால் அவருடைய பொக்கிஷ மந்திரியாவார்.

அக்பருக்கு முன்னிருந்த சில முகம்மதிய அரசர்கள் இந்துக்களுக்கு மட்டும் ஜஸியா என்ற தலைவரி போட்டிருந்தார்கள். அக்பர் அதைத் தள்ளுபடி செய்தார். அவர் ஹிந்துக்கள் செலுத்தி வந்த யாத்திரை வரியையும் தள்ளினார். இவ்வாறு அவர் ஹிந்துக்களின் நட்பையும் ஆதரவையும் பெற்றார்.

அக்பருக்கு கற்றோர்களிடத்து அதிக அன்பு உண்டு. அவருடைய மந்திரி அபுல் பாஸல் சிறந்த கல்விமான். அவர் எழுதிய அக்பர் நாமா, அயினி அக்பரி முதலிய நூல்கள் அக்பரின் மேன்மையைக்

குறிக்கின்றன. அக்பரிடத்தில் மிகவும் விலையுயர்ந்த ஓர் புத்தகசாலை இருந்தது. அவர் சங்கீதத்திலும் பிரியமுள்ளவர்.

அக்பருக்குத் தெய்வபக்தி அதிகம். அவர் மதப் பகை இல்லாதவர். எல்லா மதங்களையும் சமமாக எண்ணினார். இதைக் குறித்து மேல் நாட்டாரும் வியப்பு அடைந்துள்ளனர்.

அக்பரின் ஆட்சியில் மக்கள் சுகமாக வாழ்ந்து வந்தார்கள். அவர் விதவைகள் உடன்கட்டை ஏறுவதைத் தடுத்தார். பெண்களுக்குச் சிறு வயதில் விவாகம் செய்யக் கூடாது என்று திட்டம் செய்தார். இன்னும் பல நன்மைகள் அவர் செய்தார். அவர் புகழ் பல நாடுகளிலும் பரவியது. சுமார் 50 வருஷ காலம் மேன்மையாக ஆண்டு கி. பி. 1605-ல் அக்பர் காலமானார்.

கேள்விகள் :

1. முகலாய ஆட்சியை ஸ்தாபித்தவர் யார்?
2. பைராம்கான் யார்?
3. அக்பரின் குணம் என்ன?
4. அவரின் வெற்றிகள் யாவை?
5. அவர் ஹிந்துக்களை எவ்வாறு நடத்தினார்?
6. அவர் மதக் கொள்கைகள் யாவை?
7. அவர் செய்த நன்மைகள் யாவை?

13. கட்டிடப் பிரியர் ஷாஜஹான்

அக்பர் இறந்த பிறகு அவர் மகன் ஜஹாங்கீர் சுமார் 22 வருஷ காலம் டில்லியில் அரசு புரிந்தார். அவர் தம் தந்தை காட்டிய வழிகளில் ஆட்சி புரிந்தார். நாட்டில் கலகங்கள் ஒன்றும் இல்லாமல் மக்கள் சமாதானமாக வாழ்ந்து வந்தார்கள்.

ஜஹாங்கீர் இறந்ததும் அவருடைய பிள்ளைகளில் ஒருவராகிய ஷாஜஹான் பட்டத்திற்கு வந்தார். இவர் கி. பி. 1627 முதல் கி. பி. 1658 வரையில் ஆண்டார். இவர் தம் சகோதரர்களுக்கும் உறவினர்களுக்கும் பல கொடுமைகள் செய்து பட்டம் பெற்றார். ஆனால் அரசரான பிறகு தேசத்தை நன்றாக ஆட்சி செய்தார்.

அவர் ஆட்சி காலத்தில் நாடு செழித்திருந்தது. வியாபாரமும் விவசாயமும் மேன்மை அடைந்தன. குடிகள் பயமின்றி வாழ்ந்து வந்தார்கள். ஹிந்துக்களும் முகம்மதியர்களும் சமமாக நடத்தப்பட்டார்கள். நாட்டில் சண்டை சச்சரவுகள் இல்லை. ஆகவே அவர் தம் கவனத்தைச் சிறந்த கட்டிடங்கள் கட்டுவதில் செலுத்தினார்.

அவர் டில்லியின் அருகே ஓர் சிறந்த நகரத்தை உண்டாக்கினார். அதற்கு ஷாஜஹான்பாத் என்று பெயர். அது மிகவும் அழகான பட்டணம். அதில் பெரிய கோட்டையும், மண்டபங்களும், மசூதிகளும், சிங்கார வனங்களும் காணப்பட்டன. அந்நகருக்கு யமுனையிலிருந்து ஜலம் கொண்டுவர சலவைக் கல்லினால் ஓர் கால்வாய் ஏற்பட்டிருந்தது.

டில்லிக்கு அருகில் ஆக்ரா என்ற பட்டணம் யமுனை நதிக் கரையில் இருக்கிறது. அங்கே **தாஜ் மஹால்** என்ற மிக அழகான கட்டிடத்தைக் காணலாம். ஷாஜஹானுக்கு மும்தாஜ்மஹால் என்ற மனைவி இருந்தாள். அவள் மிகச் சிறந்த அழகும் குணமும் படைத்தவள். ஷாஜஹான் அவளிடத்து பேரன்பு கொண்டிருந்தார். அவள் தன் புருஷனு



தாஜ்மஹால்

டன் பல துன்பங்களுக்கு உள்ளானுள். ஷாஜஹான் அரசரான சிறிது காலத்தில் அவள் இறந்து விட்டாள். அவள் ஞாபகார்த்தமாக அவள் சமாதியின்மேல் ஷாஜஹான் ஓர் அழகான கட்டிடம் கட்டினுர். அதுவே உலகப்புகழ்பெற்ற தாஜ்மஹால் என்னும் கட்டிடம்.

ஷாஜஹானின் அந்திய காலம் துக்கமயமானது. அவரது நான்கு குமாரர்கள் பட்டத்திற்குப் போர் செய்தனர். ஔரங்கசீப் என்பவர் மற்றவர்களைக் கொன்றுவிட்டார். தன் தந்தையையும் சிறையி லிட்டுத் தானே அரசனுனர். ஷாஜஹான் சிறையி லேயே துக்கப்பட்டு இறந்தார்.

பல அழகிய கம்பீரமான கட்டிடங்களைக் கட் டியதால் இவருக்குக் 'கட்டிடப் பிரியர் என்ற பெயர் வழங்குகின்றது.

கேள்விகள் :

1. ஷாஜஹான் எவ்வாறு ஆட்சி செய்தார்?
2. அவர் கட்டிய நகர் எது?
3. தாஜ்மஹால் எங்கே உள்ளது?
4. அது ஏன் கட்டப்பட்டது? அதன் சிறப்பு என்ன?
5. ஷாஜஹானை ஏன் கட்டிடப் பிரியர் என்று அழைக்கி ரோம்.

---

14. ராபர்ட் கிளைவ்

நம் நாடு இப்போது ஆங்கிலேயர்களால் ஆளப் படுகிறது. ஆங்கிலேயர்கள் இங்கிலாந்து என்ற தேசத்தைச் சேர்ந்தவர்கள். அந்நாட்டு அரசர் ஆரும் ஜார்ஜ் என்பவர். நம்மை ஆள்பவரும் அவரே. சுமார் 350 வருஷங்களுக்கு முன் ஆங்கிலேயர்கள் நம் நாட்டிற்கு வியாபாரத்திற்காக வந்தார்கள். அப் போது வேறு பல ஐரோப்பிய வியாபாரிகளும் நம் நாட்டில் வியாபாரம் செய்துவந்தனர். அவர்களுக் குள் வியாபாரப் போட்டி ஏற்பட்டது. கடைசியில்

ஆங்கிலேயர்களே வெற்றிபெற்றனர். கொஞ்ச காலத்தில் அவர்கள் சில நாடுகளையும் இங்கே பெற்ருர்கள். அவர்கள் அதிகாரமும் செல்வாக்கும் பரவ ஆரம்பித்தன. அவ்வாறு ஆங்கிலேயரின் இந்திய சாம்ராஜ்யத்திற்கு அஸ்திவாரம் போட்டவர்

ராபர்ட் கிளைவ்

கிளைவ்

கிளைவ் ஓர் ஏழை ஆங்கிலேயரின் மகன். அவர் ஒழுங்காகப் பாடசாலை சென்று படிப்பதில்லை. அவர் துஷ்டப் பிள்ளைகளுடன் சேர்ந்து சோம்பேறியாகத் திரிந்து வந்தார். அவர் பெற்றோர்கள் அவரைச்சில வியாபாரிகளோடு இந்தியாவிற்கு அனுப்பி விட்டனர். அவர் கிழக்கு இந்தியக் கம்பெனியில் ஓர் குமாஸ்தாவானர். ஆனல் சீக்கிரத்தில் அதைவிட்டுச் சேனையில் ஓர் வீரர் ஆனர்.

கிளைவ் இந்தியாவிற்கு வந்தபோது பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயருக்கும் போட்டி அதிகமாக இருந்தது. பிரெஞ்சுக்காரர்களுக்கு சுதேச அரசர்களிடத்தில் அதிக செல்வாக்கு இருந்தது. பிரெஞ்சுத் தலைவராகிய டியூப்ளே என்பவர் ஆங்கிலேயர்

களை இந்தியாவைவிட்டுத் துரத்த அரும்பாடு பட்டார். அதற்காக கர்நாடக நவாப், நிஜாம் மன்னர் முதலியவர்களின் நட்பைப் பெற்ருர்.

தென் இந்தியாவின் கிழக்குப் பாகம் கர்நாடகம் என்பது. அதற்கு நவாப் அன்வருதீன் என்பவர். அவருக்கு எதிராக சந்தாசாகிப் என்பவர் நவாப் ஆக ஆசைப்பட்டார். அவர் டியூப்ளேயின் உதவியைக் கேட்டார். டியூப்ளே அவ்வாறே உதவி செய்து அன்வருதீனைத் தோற்கடித்தார். அவரும் போரில் மாண்டார். சந்தாசாகிப் நவாப் ஆனுர். அன்வருதீனின் மகன் முகம்மதுஅலி திருச்சினுப்பள்ளிக்கு ஓடி கோட்டையில் புகுந்துகொண்டார். சந்தாசாகிப்பின் சேனையும், பிரெஞ்சு சேனையும் திருச்சியை முற்றுகையிட்டன. முகம்மதாலி ஆங்கிலேயரின் உதவியை நாடினுர்.

கிளைவ் இப்போது மிக சாமர்த்தியமாக நடந்து கொண்டார். முகம்மதாலி கேட்டவுடன் உதவி செய்தார். இல்லாவிட்டால் ஆங்கிலேயர்களுக்கு ஆபத்து நிச்சயம். கிளைவ் ஓர் சேனையுடன் சந்தாசாகிப்பின் தலைநகராகிய ஆற்காட்டை முற்றுகை செய்தார். இதைக் கேட்ட சந்தாசாகிப் தன் மகனை ஓர் சேனையுடன் ஆற்காட்டுக்கு அனுப்பினுர். ஆனுல் அது கிளைவ்வால் தோற்கடிக்கப்பட்டது. பிறகு கிளைவ் திருச்சி சென்று பிரெஞ்சுக்காரர்களைத் தோற்கடித்தார். முகம்மதாலி கர்நாடக நவாப் ஆனுர். இதனுல் ஆங்கிலேயர்களுக்கு அதிக மதிப்பு ஏற்பட்டது.

இதே சமயத்தில் வங்காளத்திலும் ஆங்கிலேயர்களுக்குச் செல்வாக்கு ஏற்பட்டது. சிராஜ் உத்தௌலா என்பவர் வங்காள நவாப்பாக இருந்தார். ஆங்கிலேயருக்குச் சொந்தமான கல்கத்தா கோட்டையை அவர் கைப்பற்றினர். ஆகவே, நவாப்பிற்கும் ஆங்கிலேயர்களுக்கும் விரோதம் ஏற்பட்டது. கிளைவ் சென்னையிலிருந்து ஓர் சேனையுடன் கல்கத்தா வந்தார். சிராஜ் உத்தௌலாவின் சேனாதிபதியான மீர்ஜாபர் என்பவரை ஆங்கிலேயர்கள் நவாப்பாக்கத் தீர்மானித்தனர்.

நவாப்புக்கும் ஆங்கிலேயர்களுக்கும் **பிளாஸி** என்ற இடத்தில் யுத்தம் நடந்தது. மீர்ஜாபர் யுத்தம் செய்யாமல் சும்மா இருந்தார். இந்த துரோகத்தால் சிராஜ் உத்தௌலா தோல்வி அடைந்தார்.

பிறகு அவர் தப்பி ஓடி மரணம் அடைந்தார். சிராஜ் உத் தௌலாவுக்குப் பிறகு ஆங்கிலேயர்கள் மீர்ஜாபரை வங்காள நவாப்பாக்கினர்கள். இந்த உதவிக்காக ஆங்கிலேயர்கள் சில ஜில்லாக்களை நவாப்பிடமிருந்து பெற்றார்கள். அவைகளுக்கு ஜாகீர் என்று பெயர். கிளைவ் அந்த ஜில்லாக்களுக்கு ஜாகீர்தார் ஆனர். பின்னல் வங்காளத்திற்கு அவர் கவர்னர் ஆனர்.

இந்தியாவில் ஆங்கில அதிகாரத்தை நிலைநாட்டியவர் கிளைவ். இன்னும் அவர் பல சீர்திருத்தங்கள் செய்தார். அவர் ஊக்கமும் விடாமுயற்சியும் உடையவர். அவர் இங்கிலாந்து சென்ருர். அங்கே அதிக மரியாதையுடன் அவர் வரவேற்கப்பட்டார்.

அநேக பட்டங்கள் அவருக்கு வழங்கப்பட்டன. அவரை ஆங்கிலேயர்கள் எப்போதும் மறக்க முடியாது.

கேள்விகள் :

1. கிளைவின் குணம் என்ன ?
2. அவர் ஏன் இந்தியாவிற்கு வந்தார் ?
3. பிரெஞ்சுக்காரர்களின் தலைவர் யார் ?
4. கர்நாடக நவாப்புகள் யார் ?
5. அவர்களின் தலை நகர் எது ?
6. ஆற்காடு முற்றுகை எவ்வாறு முக்கியம் ?
7. பிளாஸி யுத்தம் யார் யாருக்கும் நடந்தது ?
8. கிளைவ் எவ்வாறு ஜாகீர்தார் ஆனார் ?
9. கிளைவ் இங்கிலாந்திற்குச்செய்த தொண்டுகள் யாவை ?

---

15. விக்டோரியா மகாராணியார்

இந்தியாவில் ஆங்கில ராஜ்யம் கொஞ்சம் கொஞ்சமாக வளர ஆரம்பித்தது. இந்நாடுகளை ஆங்கில வர்த்தகக் கம்பெனியார்கள் ஆள ஆரம்பித்தனர். அவர்கள் சரிவர ஆட்சி செய்யவில்லை. நாட்டில் பல குழப்பங்கள் ஏற்பட்டன. கம்பெனி ஆட்சியில் வெறுப்பு ஏற்பட்டதால் ஆங்கில அரசி விக்டோரியா மகாராணியாரிடத்தில் இந்திய ராஜ்யம் ஒப்புவிக்கப்பட்டது. அவர் அங்கிருந்து நம் நாட்டைச் சரியாக ஆளமுடியாதாகையால் ஓர் பிரதிநிதியை நியமித்து அனுப்பினார். அந்தப் பிரதிநிதி தான் **வைஸிராய்** என்பவர். அது முதல் இன்று வரையில் வைஸிராய்களே நம் நாட்டை ஆண்டு வருகிறார்கள்.

விக்டோரியா சிறு குழந்தையாய் இருக்கும்பொழுதே அவருடைய தந்தை இறந்துவிட்டார். அவர் தாய் மிகவும் செல்வமாக அவரை வளர்த்து வந்தார். விக்டோரியா கல்வியில் நன்ருகத் தேர்ச்சி பெற்ருர். நல்ல குணம் படைத்தவர். அவருக்கு சித்திரம் எழுதுவதிலும் சங்கீதத்திலும் பிரியம் அதிகம். அவர் சாந்தகுணமும் பொறுமையும் உடையவர். அவரிடத்தில் மத வித்தியாசம் கிடையாது. அவர் எல்லோரையும் மிகவும் மரியாதையாக நடத்தினர்.

விக்டோரியா மகாராணி

விக்டோரியா ஆங்கில அரசியானபோது அவருக்கு பதினெட்டு வயதுதான். ஆயினும் அவர் அரசாட்சியின் பொறுப்பை நன்கு அறிந்தவர். அவர் குடிகளிடத்து மிகவும் அன்பு கொண்டவர். விக்டோரியா, ஆல்பர்ட் இளவரசரை மணந்துகொண்டார். அவர்களுக்கு இரண்டு பெண்களும் ஓர் மகனும் பிறந்தார்கள். தம் பெண்களை ஜெர்மனி சக்கரவர்த்திக்கும், ருஷிய சக்கரவர்த்திக்கும் மணம் செய்வித்தார். அவர் பல அரசர்களுடன் நட்புக் கொண்டு, தேசத்தில் அமைதியை ஏற்படுத்தினர்.

கிழக்கு இந்தியக் கம்பெனியார் கி. பி. 1857-ம் வருஷம் இந்திய அரசாங்கத்தை விக்டோரியா மகா ராணியாரிடம் ஒப்புவித்தார்கள். விக்டோரியாவுக்கு இந்தியர்களிடம் அன்பு அதிகம். அவர் இந்திய ஆட்சியை ஏற்றுக்கொண்டபோது நமக்கு ஓர் சிறந்த சாசனம் அளித்தார். அதில் நமக்கு பல உரிமைகளும் பாதுகாப்புகளும் அளிக்கப்பட்டன. அவைகள் யாதெனில் "நாம் இந்தியக் குடிகளை இங்கிலாந்து குடிகளைப் போலவே கருதுவோம். ராணியாரிடத்து ஜாதி வித்தியாசம் கிடையாது. இந்திய மக்களில் திறமை உடையவர்கள் அரசாங் கத்தில் பெரிய உத்தியோகங்கள் பெறலாம். அவரவர்கள் தங்கள் மத ஆசாரங்களைத் தடை யின்றிப் பின்பற்றலாம். குடிநலத்தையே ராணியார் முதன்மையாகக் கருதுவார்." நாம் இதை மிகவும் பாராட்டுகிறோம்.

விக்டோரியா ராணியார் 64 வருஷங்கள் ஆண்ட பிறகு 1901-ல் மரணமடைந்தார். அதன் பிறகு அவர் குமாரர் எட்வர்டு நமக்கு அரசரானார். இவர் காலத்தில் எங்கும் சமாதானம் ஏற்பட்டது.

கேள்விகள் :

1. வைஸிராய் என்றால் யார்?
2. விக்டோரியாவின் குணம் என்ன?
3. அவர் குடிகளை எவ்வாறு நடத்தினார்?
4. ராணியாரின் அறிக்கையின் விஷயங்கள் யாவை?

---

16. சென்னைப்பட்டினம்

ஐரோப்பிய வியாபாரிகள் நம் நாட்டுக்கு வியாபாரம் செய்ய வந்தார்கள். அவர்களில் ஆங்கிலேயர்கள் முக்கியமானவர்கள். முதலில் அவர்கள் மேற்குக் கடற்கரையிலுள்ள சூரத் என்ற இடத்தில் தங்கள் வியாபாரத்தை ஆரம்பித்தார்கள். கொஞ்ச காலத்தில் கம்பெனி வியாபாரம் அதிகரித்ததால் கிழக்குக் கரையிலுள்ள மசூலிப்பட்டினம் என்ற இடத்திலும் பண்டகசாலை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

சுமார் முந்நூறு வருஷங்களுக்கு முன், இப்போது பெரிய நகரமாக இருக்கும் சென்னைப்பட்டினம் ஓர் சிறு கிராமமாக இருந்தது. அங்கே சில செம்படவர் குடிசைகள் மட்டுமே காணப்பட்டன. 1639-ம் வருஷம் ஸர் பிரான்ஸிஸ் டே என்ற ஆங்கில வியாபாரி சென்னைப்பட்டினம் இருக்கும் இடத்தை வியாபாரத்திற்காகப் பார்வையிட்டார். அக்காலத்தில் அந்த இடம் சென்னப்ப நாயகன் என்ற ஓர் சிற்றரசரிடம் இருந்தது. அவர் அதை ஆங்கிலேயர்களுக்குக் கொடுத்தார். சென்னப்பனால் கிடைத்தபடியால் அதற்குச் சென்னைப்பட்டினம் என்று பெயர் வைத்தார்கள்.

ஆங்கிலேயர்கள் அந்த இடத்தில் ஓர் கோட்டை கட்டினார்கள். அதற்கு செயிண்ட் ஜார்ஜ் கோட்டை என்று பெயர். அதைச் சுற்றி ஆழமான அகழிகள் வெட்டினார்கள். வியாபாரத்திற்காகப் பல பண்டகசாலைகளை ஏற்படுத்தினர். ஆங்கி

லேயர்கள் அங்கே குடியேறினர். அநேக இந்தியர்களும் வியாபாரத்திற்காக கோட்டைக்கு வடக்கிலே குடியேறினார்கள். கொஞ்ச காலத்தில் கோட்டையைச் சுற்றி ஓர் பெரிய நகரம் ஏற்பட்டது. இந்தியர்கள் வசித்து வந்த இடத்திற்குக் கறுப்புப் பட்டினம் என்று பெயர். பின்னால் ஐந்தாம் ஜார்ஜ் சென்னைக்கு விஜயம் செய்தபோது அந்த பாகத்திற்கு 'ஜார்ஜ் டவுன்' என்று பெயர் வழங்கலாயிற்று.



அடையாறு

சென்னைப்பட்டினத்தின் தென் பாகத்தில் அடையாறு என்று ஓர் ஊர் இருக்கிறது. அது அடையாறு என்ற ஆற்றங் கரையிலுள்ளது. அங்கே பிரம்மஞான சங்கம் இருக்கிறது. இதே அடையாற்றின் கரைமேல்தான் கர்நாடக நவாப்புக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் சுமார் 180 வருஷங்களுக்கு முன் யுத்தம் நடந்தது.

அடையாற்றுக்குத்வடக்கேமயிலாப்பூர் என்ற மிக அழகான இடம் இருக்கிறது. அங்கு பல அழகிய கட்டிடங்களும் கோயில்களும், குளங்களும், வீதிகளும் காணப்படுகின்றன. அவைகளில் முக்கியமானது கபாலீஸ்வரர் கோயிலாகும். கடற்கரையோரத்தில் ஸெயின்ட்தோம் என்ற ஓர் இடம் இருக்கிறது. அங்கே அநேக மாதா கோயில்களும் மாளிகைகளும் காணப்படுகின்றன.

சென்னைப்பட்டினத்தில் இன்னும் பல விநோதமான கட்டிடங்களும் மாளிகைகளும் காணப்படுகின்றன. சென்னைக் கடற்கரைக் காட்சி மிகவும் அழகானது. அங்கே ஓர் நல்ல துறைமுகம் உள்ளது. அநேக கலாசாலைகளும் வியாபார ஸ்தலங்களும் இருக்கின்றன.

கேள்விகள்:

1. சென்னைக்கு வந்த வியாபாரிகள் யார் ?
2. சென்னை என்று ஏன் பெயர் வந்தது ?
3. கறுப்புப் பட்டினம் என்பது எது ?
4. மயிலாப்பூரின் விசேஷம் என்ன ?
5. ஸர். பிரான்ஸிஸ் டே என்பவர் யார் ?
6. சென்னைப்பட்டினம் எவ்வாறு மேன்மை யடைந்திருக்கிறது ?

17. வேலூர்க் கோட்டை

வட ஆற்காடு ஜில்லாவின் தலைநகரம் வேலூர் என்ற பெரிய பட்டணம். இது பாலாற்றங் கரையிலுள்ள பண்டைக்காலப் பட்டணம். இங்கே மிகப் பழமையான ஓர் கோட்டை இருக்கிறது. இதை 500 வருஷங்களுக்கு முன் பொம்மி ரெட்டி என்பவர் கட்டினர். இக் கோட்டையைச் சுற்றி ஓர் அகழி இருக்கிறது. கோட்டைக்குள் சிறந்த வேலைப்பாடுள்ள ஓர் அழகிய சிவன் கோயில் உள்ளது. வேலூரில் இன்னும் போலீஸ் கல்விச்சாலைகளும், ஜில்லாக் கோர்ட்டுகளும் இருக்கின்றன. தொரப்பாடி என்ற இடத்தில் மாகாண பெண்கள் சிறைச்சாலையும் பெண்கள் வைத்தியக் கல்லூரியும் இருக்கின்றன. வேலூர் ஓர் பெரிய ராணுவஸ்தலம்.

வேலூருக்கு மேற்கே ஆம்பூர் என்ற சிறிய பட்டணம் இருக்கிறது. அங்கே முகம்மதியர்கள் அதிகம். பல கலாசாலைகள் இருக்கின்றன. அதுவும் ஓர் பெரிய வியாபார ஸ்தலம். இங்கேதான் அன்வருதீன் என்ற கர்நாடக நவாப் ஆங்கிலேயருடன் சண்டை செய்து மாண்டார்.

வேலூருக்குக் கிழக்கே சுமார் 15 மைல் தூரத்தில் ஆற்காடு என்ற பட்டணம் உள்ளது. இதுவும் பாலாற்றின் கரையில் இருக்கிறது. இது சரித்திரத்தில் புகழ்பெற்ற இடம். இது கர்நாடக நவாப்புகளின் தலைநகரமாக இருந்தது. அங்கே ஓர் அரண்மனை இருக்கிறது. இப்போதும் ஆற்றங்கரையிச்

அகழிகளையும், பாழடைந்த மசூதிகளையும், மண்ட பங்களையும் காணலாம். இங்கிருந்த கோட்டை யைத்தான் கிளைவ் கர்நாடக யுத்தத்தில் முற்றுகை செய்தார். இப்போதும் அவர் ஞாபகார்த்தமாக அங்கே ஓர் அழகிய கட்டிடம் இருக்கிறது. கர்



வேலூர்க் கோட்டை

நாடகம் ஆங்கிலேயர்கள் வசம் வந்த பிறகும் அங்கே நவாப் இருந்தார். ஆனல் இப்போது ஆற் காட்டில் நவாப் கிடையாது. நவாப்பின் சந்ததியார் கள் இப்போது உபகாரச் சம்பளம் பெற்று சென் னையில் வசிக்கிருர்கள்.

ஆற்காட்டிற்கு வடக்கே பாலாற்றின் வட கரையில் ராணிப்பேட்டை என்ற ஊர் இருக்கிறது. அங்கே கோர்ட்டுகளும் வியாபாரச்சாலைகளும் இருக்கின்றன.

தேசிங்கு ராஜா செஞ்சியில் ஆண்டு வந்தார். அவர் ஆற்காட்டு நவாபுடன் சண்டை செய்து மாண்டார். உடனே அவர் மனைவியாரும் அவருடன் உடன்கட்டை ஏறிவிட்டார். கர்நாடக நவாப், ராணியாரின் பதிபக்தியைக் கண்டு சந்தோஷித்து, அவர் ஞாபகார்த்தமாக இந்த ஊரை ஏற்படுத்தினர். ஆகவே அதற்கு ராணிப்பேட்டை என்று பெயர் ஏற்பட்டது.

வந்தவாசி என்ற ஊர் மற்ருேர் சரித்திரப் புகழ் பெற்ற ஊராகும். அங்கே ஓர் பாழடைந்த கோட்டை இருக்கிறது. அந்த இடத்தில் சுமார் 180 வருஷங்களுக்கு முன் இங்கிலீஷ்காரர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஓர் யுத்தம் நடந்தது. இதில் இங்கிலீஷ்காரர்கள் வெற்றி அடைந்தார்கள்.

கேள்விகள் ;

1. வேலூர்க் கோட்டை யார் கட்டியது ?
2. அவ்வூர் எவ்வாறு முக்கியமானது ?
3. ஆம்பூரில் யார் யாருக்கும் சண்டை நடந்தது? அதன் முடிவு என்ன ?
4. ஆற்காடு எவ்வாறு புகழ்பெற்றது ?
5. ராணிப்பேட்டை ஏன் ஏற்பட்டது ?
6. வந்தவாசி யுத்தம் எப்படி முக்கியமானது ?

---

18. செஞ்சிக் கோட்டை

தென் ஆற்காடு ஜில்லாவில் பெரிய கோட்டைச் சுவர்களாலும் அகழிகளாலும் சூழப்பட்ட **செஞ்சி** என்ற ஒரு ஊர் இருக்கிறது. முன் காலத்தில் அதைச் சுற்றி ஒரு பெரிய ராஜ்யம் இருந்தது. அந்த ராஜ்யத்தின் தலைநகரே செஞ்சி என்பது. அது திண்டிவனத்திலிருந்து சுமார் 20 மைல் தூரத்திலிருக்கிறது. செஞ்சி நம் நாட்டுச் சரித்திரத்தில் மிகவும் புகழ்பெற்றது. செஞ்சி, பல மலைகளால் சூழப்பட்டிருக்கிறது. அங்கு ஒரு பெரிய அழகான கோட்டை இருக்கிறது. மலைகளின்மேல் மிக நேர்த்தியான மண்டபங்கள் இருக்கின்றன. இங்கே அநேக மன்னர்கள் ஆண்டார்கள். சில காலம், செஞ்சி தஞ்சாவூர் அரசர்களிடத்தும், சந்திரகிரியில் ஆண்ட விஜயநகர அரசர்களிடத்தும் இருந்தது.

செஞ்சியில் ஆண்ட சிறந்த அரசர் **ராஜா தேசிங்கு** என்பவர். அவர் மிகவும் மேன்மையானவர். குதிரை சவாரி செய்வதிலும் போர் செய்வதிலும் அதிகத் திறமையுள்ளவர். அவர் தம் நாட்டை மிகவும் மேன்மையாக ஆண்டார். குடிகளிடத்து மிகவும் அன்புகொண்டவர். அவர் காலத்தில் குடிகள் குறைந்த வரிகளே கொடுத்தார்கள். அவர் கர்நாடக நவாப்பின் மேல்பார்வையில் டில்லி பாதுஷாவிற்கு உட்பட்டவர். டில்லி பாதுஷா அவருக்குக் கப்பம் கட்டிவந்தார்.

அக்காலத்தில் டில்லி பாதுஷாவிடத்தில் பஞ்சகல்யாணி என்ற ஓர் முரட்டுக் குதிரை இருந்தது. அதன்மேல் யாரும் ஏறிச் சவாரி செய்யமுடி



செஞ்சிக் கோட்டை

யாது. டில்லி பாதுஷா அதன்மேல் ஏறிச் சவாரி செய்பவருக்கு வெகுமதி அளிப்பதாக விளம்பரப் படுத்தினர். யாரும் அம் முரட்டுக் குதிரையின்மேல் சவாரி செய்ய முன்வரவில்லை. கடைசியாக தேசிங்கு ராஜா தம் தாயிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு டில்லிக்குப் புறப்பட்டார். அங்கே பாதுஷாவின் உத்தரவின்பேரில் அக்குதிரையின்மேல் ஏறிச்சவாரி செய்தார். இதைக் கண்டு எல்லோரும் சந்தோஷித் தார்கள். பாதுஷா அவருக்கு அநேக பரிசுகள் அளித்து, இனி தமக்கு அவர் கப்பம் கட்டவேண் டியதில்லை என்று உத்தரவு இட்டார்.

தேசிங்குராஜா செஞ்சியில் சுமார் 150 வருஷங் களுக்கு முன் ஆண்டார். அவர் பல வீரச் செயல்கள் செய்து அழியாப் புகழ் அடைந்தார். ஒரு சமயம் கர்நாடக நவாப்புடன் அவர் யுத்தம் செய்து சண் டையில் கொல்லப்பட்டார். அவருடைய வீரதீரச் செயல்களைப்பற்றி நம் நாட்டில் இப்போதும் பல பாடல்கள் வழங்கிவருகின்றன.

கேள்விகள்.

1. செஞ்சிக் கோட்டை எங்குள்ளது?
2. அதை ஆண்ட சிறந்த அரசர் யார்?
3. அவர் எவ்வாறு ஆண்டார்?
4. அவர் ஏன் டில்லிக்குச் சென்றார்?
5. அவர் குதிரையைச் சவாரி செய்ததால் என்ன லாபம்?
6. அவர் எவ்வாறு மாண்டார்?

19. தஞ்சாவூர்

பண்டைக் காலத்தில் தஞ்சாவூர் சோழ அரசர்களின் தலைநகரமாக இருந்தது. பிறகு நாயக்க அரசர்களின் காலத்திலும், மஹாராஷ்டிரர் காலத்திலும் தஞ்சாவூரே முக்கியப் பட்டணமாக இருந்தது. இவ்வூர் பல அழகிய கோயில்களுக்கும் கட்டிடங்களுக்கும் பெயர்பெற்றது. இங்கேயுள்ள பிரகதீஸ்வரர் கோயில் ராஜராஜ சோழரால் கட்டப்பட்டது. இக்கோயிலில் உள்ள நந்தி மிகப் பெரியது. அங்குள்ள கோட்டையும், குளமும், அகழிகளும் விஜய நகர அரசர்களிடத்தில் சிற்றரசர்களாக இருந்த நாயக்கர்களால் கட்டப்பட்டவை. அவைகளெல்லாம் இப்போது பாழடைந்து இருக்கின்றன. இங்கே ஓர் அழகான அரண்மனை இருக்கிறது.

இவ்வூரில் சிவகங்கைத் தோட்டம் என்று ஒன்று இருக்கிறது. அதனுள் ஓர் அழகிய மாதா கோயில் இருக்கிறது. சில சமயங்களில் இத்தோட்டத்தில் ராணுவம் வைக்கப்பட்டிருந்தது. தஞ்சாவூர் அரண்மனை இன்றும் புகழ்பெற்று விளங்குகிறது. அந்த அரண்மனையில் இரண்டு மண்டபங்கள் இருக்கின்றன. அவைகள் மகாராஷ்டிர மண்டபம், நாயக்கர் மஹால் என்பன. மகாராஷ்டிர மண்டபத்தில் தஞ்சை அரசரான சரபோஜியின் சிலை இருக்கிறது. தஞ்சாவூர் அரண்மனையில் அவரால் ஏற்படுத்தப்பட்ட ஓர் புத்தகசாலை இன்றும் காணப்படுகிறது. தஞ்சாவூர் மன்னர்கள் பல தர்மங்கள் செய்திருக்கின்றனர்.

தஞ்சாவூர் ஜில்லாவில் பல சத்திரங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு 'ராஜா சத்திரங்கள்' என்று



பிரஹதீஸ்வரர் கோயில்

பெயர். அவைகள் தஞ்சாவூர் அரசர்களால் ஜனங்களின் சௌகரியத்திற்காகக் கட்டப்பட்டன. இப்

போதும் இச்சத்திரங்கள் நன்கு அரசாங்கத்தாரால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இச் சத்திரங்கள் சிலவற்றில் கலாசாலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தஞ்சாவூருக்குக் கிழக்கில் இரண்டு மைல் தூரத்திற்கு ஓர் பெரிய ஓடை இருக்கின்றது. இதைச் சமுத்திரமென்று அழைக்கின்றனர். தஞ்சை ராணியின் பொழுதுபோக்கிற்காக இது வெட்டப் பட்டது.

தஞ்சாவூருக்குத் தென்மேற்கில் 7 மைல் தூரத்தில் வல்லம் என்ற ஓர் சிறு ஊர் இருக்கிறது. அங்கே முன் காலத்தில் ஓர் பெரிய கோட்டை இருந்தது. இங்கேதான் தஞ்சாவூர் அரசர்களின் பொக்கிஷம் வைப்பது வழக்கம். பிற்காலத்தில் இக் கோட்டையை முகம்மதியர்கள் கைப்பற்றிக் கொண்டனர். இப்போது இக் கோட்டை பாழடைந்து கிடக்கிறது.

கேள்விகள் :

1. தஞ்சாவூரிலுள்ள முக்கிய கட்டிடங்கள் யாவை?
2. தஞ்சாவூர் அரண்மனை எவ்வாறு முக்கியமானது ?
3. ராஜா சத்திரங்களின் உபயோகமென்ன ?
4. வல்லம், எவ்வாறு சரித்திரத்தில் புகழ்பெற்றது ?

20. திருச்சிராப்பள்ளி

இது சோழ நாட்டைச் சேர்ந்த ஓர் பண்டைக் கால ஊர். அக்காலத்தில் திருச்சி பெருமை அடையவில்லை. இதனருகிலுள்ள உறையூர்தான் புகழ் பெற்று சோழ நாட்டுத் தலைநகரமாக விளங்கி வந்தது. விசுவநாத நாயக்கர் என்ற மதுரை நாயக்க

அரசர் திருச்சியைத் தம் தலைநகராகக்கொண்டுஆண் டார். அவர் அங்கே ஓர் கோட்டையையும் அரண் மனையையும் கட்டினார். அவர் வெட்டிய குளத்திற் குத்தான் தெப்பக்குளம் என்று பெயர். மைசூர் அரசராகிய திப்பு சுல்தான் இக்கோட்டையில்



மலைக்கோட்டை

இருந்து கொண்டுதான் ஆங்கிலேயர்களோடு சண்டை செய்தார்.

ஆங்கிலேய ராஜ்யத்தை இந்தியாவில் நிலை நாட் டிய கிளைவ் இங்கே ஓர் சேனையுடன் வந்து பிரெஞ் சுக்காரர்களைத் தோற்கடித்தார். பிறகு சில நாட்

கள் அவர் திருச்சியிலேயே தங்கி இருந்தார். அவர் தங்கி இருந்தவீட்டைத்தான் இப்போதும் "கிளைவ்ஸ் ஹௌஸ்" என்று அழைக்கிருர்கள். இப்போது அந்தக் கட்டிடத்தில் காலேஜ் மாணவர்கள் வசிக்கிருர்கள்.

திருச்சியில் காவிரி நதி பாய்கிறது. அதனுல் இவ்வூர் மிகவும் செழிப்பாக இருக்கிறது. இந்நகரின் மத்தியில் ஓர் குன்று இருக்கிறது. அதன்மேல் தாயுமானவர் கோயில் என்றபெயர்பூண்ட ஓர் சிவன் கோயில் இருக்கிறது. அம்மலையின் உச்சியில் ஓர் பிள்ளையார் கோயில் இருக்கிறது. இம்மலையும் கோயிலும் திருச்சிக்கு மிகுந்த அழகைக் கொடுக்கின்றன.

இங்கே கோயில்கொண்டிருக்கும் சிவபிரான் ஒரு காலத்தில் தன்னிடத்தில் அதிக பக்திகொண்டிருந்த ஓர் பெண்ணுக்குப் பிரசவ காலத்தில் தாய் போல் வந்து உதவி செய்தாராம். இதனுல்தான் இவருக்குத் தாயும் ஆனவர் என்று பெயர் வந்தது. தாயுமானவர் என்ற சிவபக்தரும் இங்கேதான் இருந்தார்.

திருச்சி இப்போது ஓர் பெரிய நகரமாக இருக்கிறது. இங்கே பல உயர்தரப் பள்ளிக்கூடங்களும் கலாசாலைகளும் இருக்கின்றன. பல ஊர்களிலிருந்து இருப்புப் பாதைகள் இங்கே சந்திக்கின்றன. இது ஓர் பெரிய வியாபாரஸ்தலம். இங்கே ஓர் அகில இந்திய வானொலி நிலயம் இருக்கிறது.

திருச்சி நகரிலுள்ள பழைய கட்டிடங்களில் டவுன் ஹால் என்பது ஒன்று. அது சுமார் 200 வருஷங்களுக்கு முன் மதுரையில் ஆண்டு வந்த **மங்கம்மாள்** என்ற ராணியால் கட்டப்பட்டது. ராணி அம் மண்டபத்தில் கொலுவீற்று அரசாட்சி நடத்தினார். அவர் ஸ்ரீரங்கத்தில் காவிரி நதியில் ஜனங்கள் ஸ்நானம் செய்து மழை வெயிலுக்குத் தங்க ஓர் மண்டபம் கட்டினார். அதற்கு "அம்மா மண்டபம்" என்று பெயர்.

திருச்சிக்கு அருகே ஸ்ரீரங்கம் என்ற மிகவும் புகழ்பெற்ற விஷ்ணு ஸ்தலம் இருக்கிறது. இது காவிரி, கொள்ளிடம் என்ற இரண்டு நதிகளுக்கு இடையிலுள்ள ஓர் தீவு. இங்கு கோயிலைச் சுற்றி பல மதில் சுவர்கள் இருக்கின்றன. ஸ்ரீரங்கத்திற்கு அருகே திருவானைக்காவல் அல்லது ஜம்புகேஸ்வரம் என்ற ஓர் ஊர் இருக்கிறது. இங்கே ஓர் சிவன் கோயிலுள்ளது. இங்குள்ள கோயிலில் லிங்கம் இருக்கும் இடத்தில் எப்போதும் தண்ணீர் சுரந்து கொண்டே இருக்கிறது.

கேள்விகள் :

1. திருச்சிக் கோட்டையைக் கட்டியவர் யார்?
2. திருச்சி, சரித்திரத்தில் எப்படி முக்கியம்?
3. திருச்சிக்கு அழகு அளிப்பது எவை?
4. கடவுளுக்குத் தாயுமானவர் என்று ஏன் பெயர் வந்தது?
5. ராணி மங்கம்மாள் திருச்சிக்குச் செய்த நன்மைகள் யாவை?

21. ராஜேந்திர சோழன்

இவர் சோழ அரசர்களில் மிகவும் புகழ் பெற்றவர். இவர் ராஜ ராஜ சோழரின் மகன். இவர் நன்ருகப் படித்தவர். ஆகவே இவரைப் பண்டித சோழர் என்றும் சொல்லுவார்கள். இவர் பட்டத்திற்கு வந்தபோது இவருக்கு வயது ஐம்பது இருக்கும். இவர் வட இந்தியாவின்மேல் படை யெடுத்து அங்குள்ள அரசர்களை வென்ருர். இதனுல் இவருக்கு கங்கைகொண்ட சோழர் என்ற பெயர் உண்டு.

இவர் தன் பெயரால் ஓர் புதிய ஊரையும் கட்டினுர். அதற்குக் கங்கைகொண்டசோழபுரம் என்று பெயர். அவ்வூரில் ஓர் பெரிய ஏரியையும் கட்டினுர். இங்கே அவர் ஓர் சிவன் கோயில் கட்டினுர். அந்தக் கோயிலில் பல அழகிய சித்திரவேலைகள் இருக்கின்றன. தஞ்சையில் தன் தகப்பனுரால் கட்டப்பட்ட கோயில்போலவே இது சிறப்பாக இருந்தது. ஆனுல் இப்போது எல்லாம் பாழ் அடைந்து கிடக்கின்றன.

ராஜேந்திரன் ஓர் பலமுள்ள கப்பற்படை வைத்திருந்தார். அதைக்கொண்டு பல ஊர்களைப் பிடித்தார். அவர் சேர, பாண்டிய அரசர்களை வென்று தமிழ் நாட்டுச் சக்கரவர்த்தி ஆனுர். இவர் தம் சபையில் பல தமிழ்ப் புலவர்களை ஆதரித்தார். இவருக்கு மதத் துவேஷம் கிடையாது.

கேள்விகள் :

1. ராஜேந்திரர் எவ்வாறு பெரிய அரசர்?
2. அவருக்குள்ள வேறு பெயர்கள் யாவை?
3. அவர் கட்டிய கட்டிடங்கள் யாவை?

22. பொற்கைப் பாண்டியன்

பாண்டிய அரசர்கள் மதுரையைத் தலைநகர மாகக் கொண்டு ஆண்டார்கள். அவர்கள் மதுரையில் சுமார் 2000 வருஷங்களுக்கு முன் மிகச் சிறப்பாக ஆண்டார்கள். அவர்கள் தம் குடிகளிடத்து மிகவும் அன்புகொண்டவர்கள். அவர்கள் நீதி தவறுமல் ஆட்சி செய்தார்கள். அவர்கள் ஆட்சியின் மேன்மை, குலசேகர பாண்டியன் என்ற அரசருடைய கதையிலிருந்து நன்கு விளங்குகிறது.

குலசேகர பாண்டியன் இரவில் மாறு வேஷம் பூண்டு நகர்க் காவல் வருவது வழக்கம். ஓர் நாள் இரவு ஒரு வீதியில் ஓர் வீட்டில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. உள்ளே பேச்சுக் குரல் கேட்டது. அவ்வீட்டிலிருந்த அந்தணர் தன் மனைவியுடன் பேசிக்கொண்டிருந்தார். "பெண்ணே, நான் காசி யாத்திரை சென்று வருகிறேன். நீ தனியாக இருக்கப் பயப்படாதே. நம் அரசன் இருக்கும்பொழுது உனக்கு எவ்வித பயமும் வேண்டாம்" என்று சொன்னுன். அரசர் குடிகள் தன்னிடத்தில் வைத்திருக்கும் நம்பிக்கையைக் கண்டு சந்தோஷம் கொண்டார்.

மறுநாள் பிராமணன் காசி யாத்திரை சென்று விட்டான். இதை அறிந்த அரசர், அந்தணன் மனைவிக்கு உதவிசெய்ய எண்ணினுர். ஆகவே அத் தெருவிலுள்ள எல்லா வீடுகளுக்கும் உணவுப் பொருள்கள் தந்து உதவினுர். இரவில் யாருக்கும் தெரியாமல் அந்தணன் வீட்டைக் காத்துவந்தார்.

ஒரு வருஷம் கழித்து ஒருநாள் வழக்கப்படி அரசர் அந்தணன் வீட்டிற்குக் காவல் புரியச் சென்ருர். வீட்டில் ஆண் குரல் கேட்டது. அரசர் சந்தேகத் தின்மேல் கதவைத் தட்டினர். உடனே காசியி லிருந்து திரும்பிவந்திருந்த அந்தணர் "யார்?" என்று கேட்டார்.

அரசர் உடனே தன் தவறை உணர்ந்தார். அரசருக்கு அந்தணன் திரும்பிய விஷயம் தெரி யாது. தான் யார் என்று சொன்னுல் அந்தணன் தன் மேல் சந்தேகம் கொள்வார். ஆகவே அரசர் விரை வாகத் தெருவிலுள்ள எல்லா வீடுகளின் கதவுகளைத் தட்டிக் கொண்டே அரண்மனை சேர்ந்தார். வீட் டுக்காரர்கள் எல்லோரும் யாரோ திருடன் என்று எண்ணினர்கள்.

மறுநாள் அந்தத் தெருவிலுள்ளவர்கள் எல்லோ ரும் அரச சபைக்குச் சென்று இரவில் நடந்ததை அரசரிடத்தில் முறையிட்டார்கள். அரசர் சபை யோரை நோக்கி, "அந்தத் திருடனுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்?" என்று கேட்டார். சபையோர்கள் "கதவைத் தட்டிய கையை வெட்டி விடவேண்டும்." என்ருர்கள். உடனே அரசர் தன் வாளை எடுத்துத் தன் வலது கையை வெட்டிக் கொண்டார். எல்லோரும் திகைப்பு அடைந்தார் கள். அரசர் நடந்த வரலாறுகளைச் சபையோர் களுக்கு விளக்கினர். எல்லோரும் அரசரைப் புகழ்ந்து அவருக்கு ஏற்பட்ட கெடுதிக்கு வருந்திக் கடவுளை வணங்கினர்கள். உடனே அரசருக்குக் கை வளர்ந்தது. அக் கை பொன் போல் இருந்த

தால் அவருக்கு **பொற்கைப் பாண்டியன்** என்று பெயர் ஏற்பட்டது. இதிலிருந்து அரசர் எவ்வளவு நீதிமான் என்று விளங்குகிறது.

கேள்விகள் :

1. பாண்டியர்கள் எவ்வாறு ஆண்டார்கள் ?

2. குலசேகர பாண்டியன் எவ்வாறு நீதிமான் என்று பெயர் எடுத்தார் ?

3. அவருக்குப் பொற்கைப் பாண்டியன் என்று ஏன் பெயர் வந்தது ?

---

23. சரபோஜி ராஜா

சோழர்கள் அதிகாரம் தஞ்சாவூரில் பல ஆண்டுகள் நீடித்து இருந்தன. பிறகு பல சிற்றரசர்கள் அங்கே ஆண்டு வந்தார்கள். அவர்களுள் மகாராஷ்டிர வம்சத்தைச் சேர்ந்த சரபோஜி ஒருவர்.

இவர் தஞ்சாவூர் அரசராகிய துளசாஜியின் சுவீகாரப் பிள்ளை. அவருக்குப் பின் சரபோஜி தான் பட்டத்துக்கு வரவேண்டும். ஆனால் அவர் சகோதரர் அமரசிங் என்பவர் அரசாட்சியை அபகரித்து சரபோஜியைக் கொல்ல முயற்சித்தார். உடனே சரபோஜி தன் நண்பராகிய ஷ்வார்ட்ஸ் என்ற ஆங்கிலப் பாதிரியாரின் உதவியை நாடினார். பாதிரியார் சரபோஜியை ஆங்கிலேயருக்குச் சிபார்சு செய்து ராஜ்யத்தை மீட்டுக் கொடுத்தார். ஆங்கிலேயர்கள் இவருக்கு தஞ்சாவூரை மட்டும்தான் ஆள உரிமை அளித்தார்கள். தமக்கு உதவி செய்த பாதிரியாரை இவர் என்றும் மறக்கவில்லை.

பாதிரியார் வியாதியுற்று இருக்கும் போது அவர் அடிக்கடி அவரைப் பார்த்து வந்தார். பாதிரியாரும் சரபோஜியிடத்தில் அதிக அன்பு கொண்டிருந்தார்.

சரபோஜி சிறந்த அறிவாளி. அவருக்குக் கல்வியிலும் கலைகளிலும் அதிக அபிமானம் உண்டு. அவர் தம் சபையில் புலவர்களையும் சங்கீத வித்வான்களையும் ஆதரித்து வந்தார். இவரைப்பற்றிப் பல புலவர்கள் புகழ்ந்து பாடியுள்ளார்கள். இவர் சுமார் 100 வருஷங்களுக்கு முன்பு தான் தஞ்சையில் ஆண்டு வந்தார். இவர் தமது அரண்மனையில் ஒரு புத்தகசாலையை ஏற்படுத்தினர். அதில் அவர் பல அருமையான தமிழ், சம்ஸ்கிருத புஸ்தகங்களையும், ஏட்டுச்சுவடிகளையும் சேகரித்து வைத்தார். இன்றைக்கும் அப் புத்தகசாலை அங்கே இருக்கிறது.

சரபோஜி ராஜா

அவர் ஆங்கிலேயர்களிடத்தில் அதிக அன்பும் மதிப்பும் வைத்திருந்தார். ஆங்கிலேயர் நெப்போலி

யனை வெற்றி கொண்டதின் ஞாபகார்த்தமாக, சரபோஜி "மனோரா" என்ற ஓர் அழகான கட்டிடத்தைக் கட்டினார். இதை இன்னும் பட்டுக்கோட்டைத் தாலுக்காவிலுள்ள சாளுவநாயக்கன் பட்டணத்தில் காணலாம்.

இன்னும் இவர் பல சத்திரங்களைக் கட்டியிருக்கிறார். அநேக தான தருமங்கள் செய்திருக்கிறார். திருவையாற்றில் இருக்கும் **கலியாண மகால்** என்ற கட்டிடம் இவர் கட்டியதுதான். இக் கட்டிடத்தில் இப்போது தஞ்சை ஜில்லா போர்டார் தமிழ், சம்ஸ்கிருதம் போதிப்பதற்காக ஒரு கலாசாலை நடத்துகிறார்கள்.

இவர் மிகவும் புகழ் பெற்றவர். உதாரகுணமும் ஏழைகளிடத்து இரங்கும் தன்மையும், உடையவர். இவர் கி. பி. 1824-ம் வருஷம் மரணமடைந்தார். இவருக்குப் பின் இவருடைய மகன் சிவாஜி ராஜ்யத்தை ஆண்டார். அவர் ஆங்கிலேயர்களை விரோதித்துக் கொண்டார். ஆகவே அவர்கள் தஞ்சையைத் தங்கள் ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டார்கள். ராஜவம்சத்தைச் சேர்ந்தவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து வருகிறார்கள்.

கேள்விகள்:

1. சரபோஜி எவ்வாறு அரசரானார்?
2. ஷ்வார்ட்ஸ் பாதிரியார் நட்பு எவ்விதமானது?
3. சரபோஜி கல்விமான் என்று எவ்வாறு அறியலாம்?
4. தஞ்சாவூர் எவ்வாறு ஆங்கிலேயர் வசம் வந்தது?

24. விசுவநாத நாயக்கர்

கிருஷ்ணதேவ ராயருக்குப் பிறகு விஜயநகரத்தைப் பல அரசர்கள் ஆண்டார்கள். அவர்களில் ஒருவர் ராமராயர் என்பவர். அவர் காலத்தில் மதுரையில் சந்திரசேகர பாண்டியன் என்ற ஓர் சிற்றரசர் இருந்தார். தஞ்சாவூரில் ஓர் சோழ வம்சத்துச் சிற்றரசர் ஆண்டு வந்தார். சோழ அரசர் மதுரையின் மேல் படையெடுத்துச்சென்று சந்திரசேகரனை வென்றார். உடனே, பாண்டியன் ராமராயரிடம் சென்று சரண் புகுந்தார். ராமராயர் அவருக்கு உதவி செய்ய இசைந்தார். தன் சேனைத் தலைவர் நாகம நாயக்கர் என்பவரை ஓர் பெரிய சேனையுடன் அனுப்பினார்.

நாகம நாயக்கர் தஞ்சை அரசரைப் போரில் வென்றார். பிறகு அவர் வசம் இருந்த மதுரையைக் கைப்பற்றினார். ஆனால் சந்திரசேகர பாண்டியரிடத்தில் மதுரையை ஒப்படைக்காமல் தாமே மதுரையில் ஆட்சி செய்ய ஆரம்பித்தார். இதைக் கண்டு மதுரை மாந்தர்கள் வருந்தினார்கள். இந்த விஷயத்தை ராமராயர் கேள்விப்பட்டார். உடனே நாகம நாயக்கரைச் சிறை செய்ய உத்திரவு இட்டார். அவரைச் சிறைசெய்து வருவதற்கு யாரேனும் தன் சபையில் தயாராக இருக்கிறார்களா என்று கேட்டார். கொஞ்ச நேரம் யாரும் முன்வரவில்லை. கடைசியில் சபையிலிருந்த நாகம நாயக்கரின் குமாரர் விசுவநாத நாயக்கர் எழுந்து தாம் தம்முடைய தந்தையைச் சிறைப்பிடித்து வருவதாகச் சொன்னார்.

எல்லோரும் ஆச்சரியப்பட்டனர். விசுவநாத நாயக்கர் ஓர் சேனையுடன் மதுரை சென்றார்.

மகனுக்கும் தந்தைக்கும் மதுரையில் போர் நடந்தது. அதில் நாகம நாயக்கர் தோல்வியுற்றார். விசுவநாத நாயக்கர் அவரைச் சிறைசெய்து விஜய நகரத்திற்கு அழைத்துச் சென்றார். ராமராயர் விசுவநாத நாயக்கரை மிகவும் பாராட்டினார். அவர் வீரச் செயலை மெச்சி அவர் எது கேட்டாலும் கொடுப்பதாக வாக்களித்தார். உடனே விசுவநாதர் தம் தந்தையைத் தண்டிக்காமல் விடவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அவ்வாறே நாகம நாயக்கர் மன்னிக்கப்பட்டார். விசுவநாத நாயக்கர் மதுரைக்கு அனுப்பப்பட்டு அங்கு பாண்டியனுக்கு உதவியாக இருக்கும்படி உத்தரவிடப்பட்டார்.

மதுரையில் விசுவநாத நாயக்கர் கலகங்களை எல்லாம் அடக்கினார். பாண்டிய அரசன் எல்லா அதிகாரங்களையும் நாயக்கரிடத்தில் விட்டு விட்டார். அவர் பெயரளவுக்குத்தான் அரசராக இருந்தார். அக்காலத்தில் புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்பவர் மிகவும் கஷ்டப்பட்டனர். இக்கஷ்டங்களையெல்லாம் இவர் தீர்த்தார். நாட்டின் பல பாகங்களிலுள்ள பாளையக்காரர்களை அடக்கி அமைதியை நிலைநாட்டினார்.

கேள்விகள்:

1. ராமராயர் காலத்தில் மதுரையை ஆண்டது யார்?
2. நாகம நாயக்கர் யார்? அவர் ஏன் மதுரை சென்றார்?
3. விசுவநாத நாயக்கரின் வீரச் செயல் யாது?
4. அவர் தகப்பனாரை எவ்வாறு காப்பாற்றினார்?

2770